Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 28 (21.01.2004) புதன்கிழமை இதழ்:112

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
மகாராசி சில்க்ஸ்
சல்வார் கிற
இந்தியன் சாறி வகைகள்
மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்
T.P No - 0777286247
(அ-1879)

# சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. உடன்பாடு;
# கொழும்பில் நேற்று கைச்சாத்தானது!

## சந்திரிகா நிகழ்வில் பங்கேற்கவில்லை

(கொழும்பு)

**சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற புதிய கூட்டணியை நேற்று உருவாக்கின. இந்தக் கூட்டணியை அமைப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றுக்காலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.**

நேற்றுக்காலை 10.42 மணியளவில் கைச்சாத்திடப்பட்ட இந்த நிகழ்வில் இரு கட்சிகளின் பிரமுகர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் நிகழ்வுக்கு பௌத்த, இந்து, முஸ்லிம் மதத் தலைவர்கள் ஆசிவழங்கிய அதேவேளை, இந்த நிகழ்வுக்கு கிறிஸ்தவ மதத் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தபோதும் எவரும் கலந்து கொள்ளவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ,

(12 ஆம் பக்கம் பார்க்க)



உடன்பாட்டில் ரில்வின் சில்வாவும், மைத்திரிபால சிறிசேனவும் கையெழுத்திடுகின்றனர்



பேரியல் அஷ்ரப், டக்ளஸ் தேவானந்தா உட்பட நிகழ்வில் பங்கேற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள்

## சுதந்திரக் கட்சியின் அதிகார பரவலாக்கல் தீர்வுக்கு சோமவன்ச அமரசிங்க எதிர்ப்பு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல்தான் தீர்வு என்ற சுதந்திரக் கட்சியின் கொள்கையை தாம் முழுமையாக எதிர்ப்பதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக லண்டனிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் ஏசியன் ரிபியூன் என்ற செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் அதிகாரப் பரவலாக்கல் கொள்கையால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணிக் கொண்டாட்டத்தில் குண்டுவீச்சு; இருவர் உயிரிழப்பு!

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி உடன்பாடு கைச்சாத்திடப்படுவதையொட்டி நேற்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர்.

உடன்பாடு கைச்சாத்திடப்படுவதையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளும் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புத்தளம் - சேனைக்குடியிருப்பில் கொடிகள் கட்டி அலங்கரித்துக்கொண்டிருந்தவர்கள்மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை வடமேல்மாகாணத்தில் நடந்த வேறு பல மோதல்களிலும் மூன்று கார்கள் எரித்து நாசமாக்கப்பட்டன எனத் தெரியவருகிறது.

ஒப்பந்தம் கைச்சாதான நிகழ்வையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பாற்சோறும் வழங்கப்பட்டது.

அதேவேளை நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வழிகளில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுத் துக்கம் வெளிப்படுத்தப்பட்டது.

## ஜே.வி.பி தலைவர் நாடு திரும்பினார்!

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவரான சோமவன்ச அமரசிங்க நேற்று மாலை நாடு திரும்பினார். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டதைத் தொடர்ந்தே இவர் நாடு திரும்பியுள்ளார்.

நேற்று மாலை 6.20 மணியளவில் கட்டார் விமானசேவை விமானத்தில் கட்டுநாயக்க நிலையத்தை வந்தடைந்த சோமவன்ச அமரசிங்கவை ஜே.வி.பியின் முக்கிய தலைவர்கள் வரவேற்றனர். சோமவன்ச அமரசிங்கவின் வருகையை ஒட்டி நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முரண்பாடான நிலையிலேயே உடன்படிக்கை செய்யப்பட்டது!
### லங்கா சமசமாஜக் கட்சியின் பட்டி வீரக்கோன் கருத்து

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் - ஜே.வி.பியும் முரண்பாடான நிலையிலேயே உடன்படிக்கை செய்திருப்பதாகவும், இதனால், எந்தவொரு பயனும் ஏற்படப்போவதில்லையெனவும் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பட்டி வீரக்கோன் - இரு கட்சிகளுக்குமிடையிலான கூட்டணியின் பின்னர் கருத்து வெளியிட்டபோது தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது,

சுதந்திரக்கட்சி அதிகாரங்களைப் பரவலாக்குவது தொடர்பாகப் பேசுகின்றது. ஆனால், ஜே.வி.பி அதிகாரப் பரவலாக்கல் தேவையில்லையெனக் கூறுகின்றது. இதுவே இரு கட்சிகளுக்குமிடையில் பாரிய வேறுபாட்டைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கு உள்ளூராட்சி தேர்தல்; மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நிர்வாக மாவட்டங்களில் இருக்கும் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 23 ஆம் திகதி நடைபெறும்.

இதேவேளை அம்பாறையில் நிர்வாக மாவட்டத்தில் உள்ள கல்முனை மாநகரசபை, சம்மாந்துறை பிரதேசசபை,அக்கரைப்பற்றுப் பிரதேசசபை, அட்டாளைச்சேனை பிரதேசசபை, நிந்தவூர் பிரதேசசபை, திருக்கோவில் பிரதேசசபை, (12 ஆம் பக்கம் பார்க்க)

## யசுஷி அகாஷி கொழும்பு வந்தார்

(கொழும்பு)

ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

கொழும்பு வந்த அகாஷி - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இதர அரசியற்கட்சித் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், நாளைமறுதினம் ரோக்கியோவில் வைத்து இலங்கைக்கு நிதியுதவி வழங்கிய நாடுகளினதும், அமைப்புக்களினதும் பிரதிநிதிகளுடனான கூட்டம் ஒன்றையும் அகாஷி நடத்தவுள்ளார்.

அதன்பின்னர் கிளிநொச்சி செல்லும் அகாஷி - சமாதானப் பேச்சுக்களின் தேக்க நிலை குறித்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடுவார்.

# மட்டு - தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் விபரம்!

மட்டக்களப்பு - தேசிய கல்வியியல் கல்லூரிக்கு 2004 ஆம் ஆண்டில் கல்வியைத் தொடர அனுமதி பெற்றுள்ள மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு -

**தொழில்நுட்பம்**

யு.எல்.நிலுவா (சம்மாந்துறை), சரத் சந்திரபோஸ் நிமலரூபன் (பொலிகண்டி மேற்கு), யோகராசா மங்களதர்சன் (முறக்கொட்டாஞ்சேனை), தாஹிர் முகமட் அக்ரம் (மூதூர்), கரீம் மொகமட் பால்கி (கல்முனை), கோபாலரத்தினம் உமேஸ்குமார் (துறைநீலாவணை), ஏ.எம்.பர்ஷான் (கிண்ணியா), மகேஸ்வரன் சுதாகரன் (ஏழாலை மேற்கு), ஜே.வரப்பிரகாசம் (மல்லாகம்), அன்னலிங்கம் ரதீஸ்குமார் (மல்லாகம்), மொகமட் இப்றாஹீம் நியாஸ் (கிண்ணியா), தெய்வேந்திரன் ரூபனாந்தி (நல்லூர்), சுஹுமா லெப்பே மொகமட் பாயிஸ் (சாய்ந்தமருது), அப்துல் ரஸாக் மொகமட் அஸ்கர் (கல்பிட்டிய), ஹபீப் மொகமட் மொகமட் இப்றாஹீம் (காலி), சிவசுப்பிரமணியம் பாலமுரளி (கரவெட்டி), கமலநாதன் ரகுவரன் (கழுவாஞ்சிக்குடி), சிவசுப்பிரமணியம் நிரஞ்சனுர்கன் (உடுவில்), சிவராசா ரமணன் (மல்லாகம்), சிதம்பரநாதன் பானுகோபன் (நல்லூர்), இராசரத்தினம் சுகந்திரன் (உடுப்பிட்டி).

**ஆரம்பக்கல்வி**

சிந்துதுரை சுகந்திரன் (அம்பாறை), நாகராசா விவேகானந்தன் (கல்முனை), சிங்கராசா லோகராசா (மட்டக்களப்பு), கலைவாணி முத்துமாரி (மட்டக்களப்பு), கந்தசாமி பத்தினாதன் (மட்டக்களப்பு), கஜேந்திரராசா குகராணி (திருக்கோவில்), கந்தசாமி கமலினி (சாவகச்சேரி), அமலதாஸ் அந்தோனிஸ் (யாழ்ப்பாணம்), பகவத்சிங்கம் ஜெயசலுஜா (யாழ்ப்பாணம்), சிவலோகநாதன் துளசி (நீர்வேலி), ஆனந்தவடிவேல் நிலக்ஷினி (கல்லாறு), பரமநாதன் பிரதீபா (கொழும்புத்துறை), ஞானசூரியர் கிருஷ்ணகுமார் (கல்லடி), சற்குணதாஸ் நவநீதமோகன் (புதுக்குடியிருப்பு), அருளானந்தம் ஜொய்சி சுனிதா (யாழ்ப்பாணம்), அகமட் லெப்பே ஹமீதா (சம்மாந்துறை), சின்னத்தம்பி லோகேஸ்வரன் (அம்பாறை), நடராசா விவேகராசா (தம்பிலுவில்), குணரத்தினம் விஜயபிரிந்தா (கல்முனை), மொரிஸ் செல்லர் றொட்னி (காரைதீவு), ஜெயராசா ஜெயபிரதா (திருகோணமலை), நெல்சன் றீகன் வட்டபெரோன் (அக்கரைப்பற்று), சிவலிங்கராசா உதாசாந்தி (மூதூர்), நாகராஜ் விவேகானந்தன் (கல்முனை), துஷ்யந்தி வைரமுத்து (திருகோணமலை), ரஹமத்துல்லா மொகமட் பிஸ்ரி (புத்தளம்), மகேந்திரகுமார் மகேமா (மாத்தளை), ஜெயசிங்கம் பிரதீபா (ஹட்டன்), நீதிராசா உஷாதர்சினி (கல்லாறு), பாக்கியராசா வானதி (கல்லாறு), இராசரத்தினம் உதேயினி (களுவாஞ்சிக்குடி), பாஸ்கரன் விவேகா (மட்டக்களப்பு), ஹாயாத்து மொகமட் மொகமட் நில்பான் (அக்கரைப்பற்று), தங்கராசா கேந்திரராசா (கல்லாறு), கோபாலகிருஷ்ணன் உதயகலா (கரடியனாறு), மரியதாஸ் பிரியதர்சினி (மட்டக்களப்பு), பிரபாகரன் காந்திதா (யாழ்ப்பாணம்), கந்தசாமி சுரேஷ் (மட்டக்களப்பு), வேலுப்பிள்ளை கலைஅரசி (வரணி), இராசலிங்கம் தீபா (முல்லைத்தீவு), யசோதை இராசையா (நவக்கிரி), செல்வநாயகம் அருட்செல்வி (அச்சுவேலி), ஆசையப்பு மேரி செசிகுளாஸ் (மன்னார்), கனகசபை கௌசி (திருகோணமலை), சரவணமுத்து விநோதினி (மாத்தளை), சி.சந்திரகிரிஷா (கல்முனை), மன்சூர் சித்திமுர்ஜிதா (போபோகம), போனிப்பாசா பிரசாயினி (அக்கரைப்பற்று), அப்துல் ரஹீம் ஜிஸ்ரியா (சாய்ந்தமருது), சின்னத்தம்பி சுகிதா (கல்முனை), குமார் தில்லைநாதன் (கல்முனை), ஈஸ்வரானந்தம் அனிதா (தம்பிலுவில்), ஆசைநாயகம் ரேணுகா (கல்முனை), பேச்சிமுத்து தினேஷ்குமார் (மூதூர்), இராசரத்தினம் சுபாஜினி (திருகோணமலை), சின்னத்தம்பி கலைச்செல்வி (தோப்பூர்) இராகோபால் மேனகா (பசறை), பாலசுப்பிரமணியம் நிஷாந்தினி (டிக்கோயா), மதர்ஷா நஸீரா (வட்டவளை).

**சமூக விஞ்ஞானம்**

சிவராசா சிவகரன் (வேலணை), அகமட் இப்றாஹீம் பாஸ்மியா (காத்தான்குடி), சின்னத்தம்பி திருபரன் (தெல்லிப்பளை), எம்.இராசஇராசேஸ்வரி (யாழ்ப்பாணம்), என்.கோணேஸ்வரி (புத்தூர்), திருச்செல்வம் ரஞ்சிதமலர் (காரைநகர்), சந்திரசேகரன் சிவதர்சினி (புலோலி), இரட்ணராசா ஜெயகரன் (கொக்குவில்), நல்லையா மோகனதாசன் (புத்தூர்), சண்முகராசா அனுஜா (புலோலி), சபாரத்னம் இராஜயோகினி (முல்லைத்தீவு), அப்துல் ஜபார் மொகமட் நினீஸ் (சாய்ந்தமருது), வைத்திய நாதபிள்ளை தயாளினி (திருகோணமலை), சங்கரப்பிள்ளை விஜிதா (முல்லைத்தீவு), எம்.நிசாம் முகமது நிஸ்தார் (அக்குரஸ), ஜெயலட்சுமி இராமச்சந்திரன் (தெல்லிப்பளை), தாமோதரப்பிள்ளை மயூரன் (அல்வாய்), சிவாஜினி சிதம்பரநாதன் (சுன்னாகம்), பாலசுப்பிரமணியம் பிரதீபன் (வரணி), சண்முகதேவன் ராஜினி (சாவகச்சேரி), கணேசலிங்கம் கஜேந்திரன் (ஏழாலை), இராசதுரை கஜேந்திரன் (தெல்லிப்பளை), இராசகாந்தன் சதீஸ் (அக்கரைப்பற்று), வீரையா சந்திரமோகன் (வவுனியா), அப்துல் ஜபார் அப்துல்லா (மூதூர்), ஸ்ரெல்லா டிலானி ஜேசுதாசன் (முருங்கன்).

**முதல் மொழி**

அம்பலவாணன் ஹேமப்பிரியா (கல்லாறு), நாகேந்திரம் ஜெயபிரகாஷ் (மூதூர்), பாலரஜனி பாலசுந்தரம் (பூநகரி), தவராசா தயாபரன் (கொட்டடி), கேதினி சோமசுந்தரம் (மட்டக்களப்பு), பாலசிங்கம் மஞ்சுளா (மானிப்பாய்), சண்முகராசா வாசுகி (வந்தாறுமூலை), சபாநாயகம் வேந்தராசா (கொக்கட்டிச்சோலை), அமிர்தநாயகம் வனிதா (யாழ்ப்பாணம்), மணியம் சஜிகலா தேவி (துணுக்காய்), ஸ்பின் கௌதமன் (யாழ்ப்பாணம்), ஆதம்பாவா சம்சுனா (சாய்ந்தமருது), நவரெத்தினம் தவரூபன் (உருத்திரபுரம்), பொன்னுராசா சுதாகரன் (மூதூர்), பாமினி கனபதிப்பிள்ளை (முல்லைத்தீவு), ஞானசேகரம் விஜோஜினி (செங்கலடி), மொகமட் பாறுக் ஜகானியா (ஆரையம்பதி), ஜெயகௌரி முத்துஇருள்நந்திதேவர் (வவுனியா), சரவணமுத்து தவமணி (முறக்கொட்டாஞ்சேனை), முத்துலிங்கம் ஜெகதாசன் (கோணாவளை), அலோசியஸ் திலக்சனா (தேற்றாதீவு), ஏராமியா நரேந்திரா (புத்தூர்), ராஜேந்திரா ராஜகுமார் (யாழ்ப்பாணம்), கிருத்திகா அருணகிரிநாதன் (வவுனியா), இராஜகோபால் சஜிகலா (கோமாரி), ஐயாத்துரை சந்திரகுமார் (மட்டக்களப்பு), அந்தோனி விஷ்னுவர்தனி (குச்சவெளி), பேர்னாட் சேவியர் மோட்சராசா (முதல்).

**விஞ்ஞானம்**

அப்துல் லதீப் நிஸ்மியா (காத்தான்குடி), நாகமணி விமலினி (காரைதீவு), வடிவேலு கைலாயநாதன் சிறிரங்கன் (கொழும்பு), சுப்பிரமணியம் சோமலா (மட்டக்களப்பு), கனகரத்தினம் சுகன்யா (மட்டக்களப்பு), ஜேசுநேசன் சிந்தியாவேகினி (யாழ்ப்பாணம்), துரைசிங்கம் வாசுகி (சுழிபுரம்), பொன்னையா விஜேந்தினி (காரைதீவு), அடைக்கலம் ஜெனி ஜெசிகா (யாழ்ப்பாணம்), புவனேந்திரன் சுகிதகுமார் (அம்பாறை), கணேசமூர்த்தி காந்திமதியினி (அக்கரைப்பற்று), குணரத்தினம் குணவிதியா (பளை), ஜெயரட்ணம் மயூரன் (மன்னார்), விஜயரத்தினம் விஜயபாபு (காரைதீவு), கருணாநிதி பிரதீபன் (மட்டக்களப்பு), பூபாலசிங்கம் உதேஸ்குமார் (மட்டக்களப்பு), ஜெயகுமாரன் நிருபினா (பதுளை), தணிகாசலம் சந்திரிகா (பளை), தனுசியா ஓங்கநாதன் (வவுனியா), கணேசமணி சங்கீதா (சாவகச்சேரி), வான்மதி இராசேஸ்வரன் (உடுப்பிட்டி), மாணிக்கவாசகம் யோகரஞ்சினி (கல்முனை), சுதர்சினி சண்முகநாதன் (இளவாலை), தங்கராசா லோகேஸ்வரி (புத்தளம்), தம்பிஜயா லாவண்யா (கல்முனை), அரியார் முசாமில் அலி (சம்மாந்துறை), அப்துல் ரஹீம் மாகேசா (கிண்ணியா), இராசலிங்கம் கவின்யா (யாழ்ப்பாணம்).

**கணிதம்**

மதியாபரணம் மதிராஜ் (யாழ்ப்பாணம்), யசோதினி மகாதீபன் (வல்வெட்டித்துறை), சிவசுப்பிரமணியம் பாலமுரளி (கரவெட்டி), கணேசமூர்த்தி சர்மினி (சாவகச்சேரி), அருணகிரிநாதன் கிருஷ்ணப்பிரியா (காரைநகர்), தனபாலசிங்கம் பிரதீபா (இயக்கச்சி), வேதநாயகம் நிசாந்தினி (சாவகச்சேரி), சிங்கராசா நிரஞ்சன் (காங்கேசன்துறை), தர்மராசா இராசமாலா (புத்தூர்), விஸ்வலிங்கம் முருகதாஸ் (அல்வாய்), கஸ்பர் யூலஸ் கபிலன் (மன்னார்), சிவசுப்பிரமணியம் செந்தில்குகன் (புத்தூர்), செபமாலை ஜேம்ஸ் ரவீந்திரகுமார் (பருத்தித்துறை), நடராசா பிரதீபன் (கரவெட்டி), சுப்பிரமணியம் சிவராமன் (ஏழாலை), குணரத்தினம் இராசதீபன் (புத்தூர்), பாலசுப்பிரமணியம் பிரதீபன் (கரவெட்டி), சிவதீபா (பண்டத்தரிப்பு), தம்பித்துரை லோகிதா (சுன்னாகம்), பேரின்பநாயகி விநாயகமூர்த்தி (மாதகல்), மாகலிங்கசிவம் சுமனா (கரவெட்டி), கனகரத்தினம் தவன் (சுன்னாகம்), இராசரத்தினம் இதயராசா (கல்முனை).

(தொடரும்)

## பொதுநூலக வாரம் அனுஷ்டிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதிவரை பொதுநூலக வாரத்தை அனுஷ்டிக்கவுள்ளது. நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நடைபெறவுள்ள பொது நூலக வாரத்தின்போது, பொதுமக்களிடம் இருந்து நூல்கள் சேகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று சேகரிக்கப்படும் நூல்கள் - சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய இடங்களிலுள்ள பொதுநூலகங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன.

கடந்தகாலப் போரின்போது சாவகச்சேரி நகரசபையின்கீழ் இயங்கிவந்த நூலகங்கள் முற்றாக சேதமடைந்ததுடன், பெறுமதிவாய்ந்த பல நூல்களும் அழிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

16", 14", 12", 10" தச்சு வேலை செய்யும் சீனா மெசின்கள், டிசைன் சீவும் ரஷ்டர்கள், சான்பேப்பர், கிறைண்டர்கள், எலெக்ரிக் றில்லர்கள், அங்கிள் கட்டிங் மெசின், வளைவு வெட்டும் ஜிக்சோ, தூசு அடிக்கும் ஹூவோவர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: கி.சுதாகரன், 20, 2 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி/2159)

### மணமகள் தேவை

பிரான்சில் வசிக்கும் 35 வயது நிரம்பிய சதய நட்சத்திரமும் உயர் யத்து செவ்வாய் கொண்ட மணமகனுக்கு பொருத்தமான மணமகளை தேடுகின்றனர். மணமகள் வெளிநாட்டில் இருப்பது விரும்பத்தக்கது. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.22 மே/பா நமது ஈழநாடு, இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/2154)

### விற்பனைக்கு

TATA - 450 சிவப்பு நிற CANDER 15000 Km ஓடிய நிலையில் இல. 011 - WP-HK 2797 பினான்ஸ் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 265/12 புளுமண்டல் வீதி, கொழும்பு - 13

T.P:- 011 2385530

0777 - 666704 (593)

றோமன் கத்தோலிக்க பெருமக்களே உங்களுக்கு ஓர் நற்செய்தி

பழைய ஏற்பாடும் சேர்ந்த பைபிள் 275/=, புதிய ஏற்பாடு மட்டும் 85/= சொற்ப பிரதிகள் மட்டுமே கைவசமுள்ளது. உடனே பெற்றுக்கொள்ள

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி - 021 2225542 (சி/2166)

யசோ இறபர் ஸ்டாம் 75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட், 35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/2152)

திறைச்சனல் சங்கானை

இன்றுமுதல்

தழுமலை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

Can You do a lot of

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

ஜெய்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.


## அரசாங்க அறிவித்தல்

### மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

### 2004 ஆம் ஆண்டுக்குரிய வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி கோரல்

யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும், விண்ணப்ப படிவத்தினையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தை அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். என விலாசமிட்டு மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியிலோ 2004.02.16 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படவேண்டும். அன்றையதினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

வாகனங்களின் விபரம்

- பிக்கப்
- வான்
- கார்
- மோட்டார் சைக்கிள்
- லொறி
- முச்சக்கர வண்டி (Auto)

அரசாங்க அதிபரும்
மாவட்ட செயலாளரும்
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி/2165)

## அரசாங்க அறிவித்தல்

### யாழ்.மாவட்ட செயலகம்

### 2004 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சேவைகள் வழங்குனர்களை பதிவு செய்தல்

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு பின்வரும் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மை பதிவுசெய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியார்டமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை 2004.02.20 ஆந் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். எனும் விலாசமிட்டு தபாலுறையின் இடது மேல் மூலையில் பொருட்கள் சேவைகள் வழங்குனர்களை பதிவுசெய்தல் எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

01. கணனி, நிழற்படப் பிரதி இயந்திரம், தட்டச்சு இயந்திரம், பக்ஸ் இயந்திரம் கொள்வனவும் உதிரிப்பாகங்களை வழங்குதலும் திருத்தமும் மற்றும் மோட்டார் வாகனங்களின் உதிரிப் பாகங்களை வழங்குதலும் அவற்றினை திருத்துதலும்.
02. காகிதாதிகள், எழுதுபொருட்கள் வழங்குதல்.
03. பாவனைப் பொருட்கள். (ஈர்க்கில்தடி, தும்புத்தடி, சவர்க்காரம், வீம், காப்பிக், பைனோல், குளோரின் முதலியன)
04. மரத்தளபாடங்கள்.
05. உருக்குத் தளபாடங்கள்.
06. கட்டட தளபாடத் திருத்தம் செய்வதும் அதற்குரிய பொருட்களும்.
07. இரும்புப் பொருட்களும் மற்றும் மூலப்பொருட்களும்.
08. பிங்கான் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள்.
09. மின் உபகரணங்களும் உதிரிப்பாகங்களும்.
10. இறப்பர் முத்திரைகள்.
11. சீருடைத்துணிகள் மற்றும் துணி வகைகள்.
12. மின்பிறப்பாக்கி, மின்மோட்டார், நீர் இறைக்கும் இயந்திரம் வழங்குதலும் திருத்தமும் சேவிஸ் செய்தலும்.

அரசாங்க அதிபரும்
மாவட்ட செயலாளரும்
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(சி/2164)

## தமிழ் உலகம் அறிமுக விழா நடைபெற்றது

யாழ்.பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடாத்திய "தமிழ் உலகம்" இதழ் அறிமுக விழா நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

தமிழ்த்துறையின் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அறிமுகவுரையினை கலாநிதி என்.சிவலிங்கராஜா யாழ். கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி கமலநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். யாழ். பல்கலைக்கழக மாணவர் வே.ஞானசிவந்தனின் நன்றியுரையோடு நிகழ்வுகள் யாவும் முடிவடைந்தன.

## இந்து நாகரிகம் முன்னோடித்தேர்வு

க.பொ.த உயர்தர பிரிவின் இந்து சமயம் மற்றும் இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடித் தேர்வு ஒன்றினை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தவுள்ளது.

இந்தத் தேர்வுக்கான விண்ணப்ப இறுதி நாள் பெப்ரவரி 5ஆம் திகதி ஆகும். தேர்வுகள் மார்ச் 8 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் சைவ பரிபாலன சபையினர் தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (58)

# ஜனாதிபதிக்கும் புலிகளுக்குமிடையே இரகசியமான முறையில் பேச்சுக்கள்

## இந்தியப் பத்திரிகை கூறுகிறது

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் இடையில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திடம் பாதுகாப்பு அதிகாரங்கள் இல்லையென்பதால், புலிகள் தற்போதைய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்றும், பாதுகாப்பு அதிகாரத்தைத் தம்முடனேயே தக்கவைத்துக்கொள்வதில் உறுதியாக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் இரகசியப் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தத் துணிந்துள்ளார்கள் என்றும் அந்தச் செய்தி தெரிவிக்கின்றது.

ஜே.வி.பியுடனான அரசியலுறவை சந்திரிகா கைவிடும் பட்சத்தில், புலிகள்- ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கக்கூடும் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் புலிகளுக்குமிடையில் எவ்வித இரகசிய பேச்சுவார்த்தைகளும் கிடையாது என்று ஜனாதிபதி தரப்பினர் மறுப்புத் தெரிவித்துள்ளபோதும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர உட்பட கட்சிப் பிரமுகர்கள் சிலர் லண்டனில் புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து உரையாடவுள்ளார்கள் என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க- புலிகளைக் கண்டித்துப் பேசுவதைத் தவிர்த்து வருவதாகவும், நோர்வேயின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை அனுசரித்து நடப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்ற இந்தச் செய்திக் குறிப்பு, ஜனாதிபதியின் தற்போதைய நடவடிக்கைகள் புலிகளுடனான அரசியலுறவை பேணுவதாக அமைகின்றன என்றும் தெரிவித்துள்ளது.

அதேநேரம் -

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் புலிகள் எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்காமல் நடுநிலையாக நின்றால், புலிகளின் அந்த நிலைப்பாட்டை சிறிலங்கா சுதந்திரக்கட்சி மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்று ஜனாதிபதி தரப்பைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத கட்சிப் பிரமுகர் ஒருவர் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொங்கல் விழா

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் இந்து சமய கலாசார அலுவலகள் திணைகளத்தினால் நடத்தப்படும் 2004 ஆம் ஆண்டு பொங்கல் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

காலை எட்டு மணிக்கு பொங்கலுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் - விசேட பூஜை, அருளுரை, தேசிய விளையாட்டுக்கள், கலாசார நிகழ்வுகள் என்பன இடம் பெறும்.

## வலைப்பந்து, கரப்பந்து நடுவர்களுக்கான பயிற்சி

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் வலைப்பந்து, கரப்பந்து விளையாட்டுக்களுக்கு பொறுப்பான பயிலுனர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான பயிற்சி எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது

இப் பயிற்சிக்கு வருகை தரும் ஆசிரியர்கள் பயிற்சிக்கேற்ற உடையோடும், விளையாட்டுக்கு உகந்த பந்தோடும் வருகை தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (58)

# ஜே.வி.பி, சுதந்திரக்கட்சி கூட்டு ஐ.தே.க. மனதார வரவேற்கிறது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொண்டு, பொதுத் தேர்தலில் வெற்றியீட்ட ஜனாதிபதி திட்டமிட்டு வருகிறார். இந்தக் கூட்டை நாங்கள் ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம் என கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை மாத்தளை நாவுல நகரில் நடைபெற்ற ஐ.தே.க.பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - ஜே.வி.பியைப் பற்றியும் முன்னர் அதனால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள், நடவடிக்கைகள் பற்றியும் மக்கள் நன்கறிவர். அவர்களால் செய்யப்பட்ட கொலைகளையும், தீமூட்டப்பட்ட தொழிற்சாலைகள், அதனால் பாதிப்புக்குள்ளான குடும்பங்களையும் இன்னும் மக்கள் மறந்துவிடவில்லை. அத்தகைய ஒரு கட்சியுடனேயே இன்று ஜனாதிபதி கூட்டு சேர முன்வந்துள்ளார்.

இந்த நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக ஜனாதிபதி சந்திரிகாவும் அனுருத்த ரத்வத்தவும் இருந்த காலத்தில்தான் மத்திய வங்கி குண்டுவெடிப்பு, கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதல், தலதா மாளிகை தாக்குதல் போன்ற அனைத்து சம்பவங்களுமே இடம் பெற்றன. 2001 ஆம் ஆண்டு டிசம்பர் தேர்தலில் - ஐக்கிய தேசிய முன்னணி மக்கள் ஆட்சியில் அமர்ந்த நிமிடம் முதல் இந்த நிமிடம் வரை நாட்டில் எந்தவித அசம்பாவிதங்களும், குண்டுவெடிப் புக்களும் ஏற்படவில்லை. நாட்டின் அபிவிருத்திக்கு முன்னர் மக்கள் மத்தியில் அச்சமற்ற ஒரு சாதாரண சூழல், அமைதிநிலை ஏற்படவேண்டும். இந்த நிலையை ஏற்படுத்துவ தற்காகத்தான் அன்று தொடங்கிய எல்லாவித விமர்சனங்களையும் புறந்தள்ளிவிட்டு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டார்.

இன்றைய அரசு ஆட்சியைப் பொறுப்பேற்ற 25 மாதங்களில் நாட்டில் குண்டு சத்தம் கேட்கவில்லை, மரண ஓலங்கள் கேட்கவில்லை. அத்தகைய ஒருநிலை நாட்டில் மீண்டும் தலைதூக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கவேண்டியது மக்கள்தான்.

ஜனாதிபதி சந்திரிகா தனது கட்சியின் ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றத்தினதும், அமைச்சரவையினதும் கண்களை மூடிவிட்டு, கோடிக்கணக்கில் பண நோட்டுக்களை அச்சடித்து பணத்தின் பெறுமதியையும், பொருளாதாரத்தை பாதாளத்துக்கும் தள்ளினார்.

தவறான முகாமைத்துவம் காரணமாகச் சகலதுறைகளும் பல கோடி ரூபா நட்டத்தில் இயங்கின. நாட்டின் விவசாயத்துறையில் ஈடுபட்டிருந்த சகல தரப்பினருமே பாரிய அளவில் பாதிக்கப்பட்டனர். கடந்த நவம்பர் மாதம் மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்ற அதிரடி நடவடிக்கை, நாட்டு மக்களின் எதிர்காலம் பற்றிய ஒரு அவநம்பிக்கையை அவர்கள் மனங்களில் வேரூன்றச் செய்துள்ளது. இந்த நாட்டின் மேல் நல்லெண்ணம் கொண்டிருந்த சகல சர்வதேச அமைப்புக்களும் இப்போது நம்பிக்கை இழந்துவிட்டன.

இப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் நேசம் கொண்டிருக்கும் ஜே.வி.பி. ஒரு இணக்கப்பாட்டிற்கான ஒப்பந்தத்தையும் மேற்கொண்டுவிட்டபிறகுதான், அதன் உண்மையான சுயரூபம் வெளிப்படும். துப்பாக்கி முனையில் வரிகள் அறவிடப்படும் நிலைமை உருவாகும். நாட்டின் சகல ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகமும் பாதிக்கப்படும். அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் ஸ்தம்பிதமடையும். இவை எல்லாவற்றிக்கும் மேலாக நாட்டில் மீண்டும் யுத்த சூழல் ஏற்பட்டு, இரத்த ஆறு பெருக்கெடுக்கும் நிலை தவிர்க்கமுடியாததாகிவிடும். இந்தக்கூட்டு இடம்பெற்றால் நமது நாட்டுக்கு உதவியளிக்க ஒப்புக்கொண்டுள்ள சகல வெளிநாடுகளுமே முற்றுமுழுதாக இதிலிருந்து ஒதுங்கிக்கொள்ளக்கூடிய நிலையும் தவிர்க்கமுடியாததாகிவிடும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால், மிகத்துணிகரமாக மக்கள் முன்சென்று ஆதரவுபெறும் அளவுக்கு எமது இந்த இரண்டாண்டு கால ஆட்சி நடைபெற்றுள்ளது. எத்தகைய சூழ்நிலைக்கும் முகம் கொடுக்க நாம் தயாராகவே உள்ளோம். வருகிற பொதுத்தேர்தலில் இப்போது இருப்பதைவிட மேலும் 15 ஆசனங்களை நாம் பெறுவோம் என்பது உறுதி எனவும் தெரிவித்தார்.

## உடத்தலவின்ன படுகொலை சம்பவம்

# ரத்வத்தவின் கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிப்பு

உடத்தலவின்ன படுகொலைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் கொழும்பு உயர்நீதிமன்ற ட்ரயல் அற்பார் நீதிவான்களால்- முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், இக்கொலை வழக்கின் முதலாவது எதிரியுமான அனுருத்த ரத்வத்தவினால், சமர்ப்பிக்கப்பட்ட மனு நேற்றுமுன்தினம் நிராகரிக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் மேற்கொள்ளப்படவுள்ள கூட்டணி உடன்படிக்கையானது கைச்சாத்திடும் நிகழ்வின்போது, தானும் பங்குபற்ற அனுமதியளிக்குமாறு விடுத்த மனுவையே நீதிவான்கள் நிராகரித்துள்ளனர்.

இந்த நிகழ்வானது நேற்றைய தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அன்றைய தினம் நடைபெறவிருந்த வழக்கு விசாரணையை ஒத்திவைத்து, தனது கட்சிக்காரர் மேற்படி நிகழ்வில் பங்குபற்ற வசதி செய்யுமாறு ரத்வத்தவின் வழக்கறிஞர் சமர்ப்பித்த மனுவே நிராகரிக்கப்பட்டதாகும்.

## வடமேல் மாகாண சபைத் தேர்தல்

# ஐ.தே.கட்சி முதன்மை வேட்பாளராக அசோக வடிவமங்காவ போட்டியிடுவார்

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் புது முகங்கள் ஒருசிலவே போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளராக மாகாண எதிர்க்கட்சித் தலைவர் வடிவ மங்காவ போட்டியிடவுள்ளார்.

வட மேல் மாகாணத்திற்கு இவர் இம்முறை புத்தளம் மாவட்டத்திலிருந்து போட்டியிடவுள்ளார். இதேவேளை, இக்கட்சியின் சார்பில் அங்கத்துவம் பெற்றுள்ள அனைவருமே இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்கள் எனத் தெரியவருகின்றது.

குருநாகல் மாநகர சபை உறுப்பினர் ஒருவரே இம்முறை சிறுபான்மையினர் சார்பாக வடமேல் மாகாணத்தில் போட்டியிடவுள்ளார். இவர் முஸ்லிம் இனத்தைச் சார்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நீர்வள, நீர் முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரமபெரேரா முதல்வர் பதவிக்குப் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அதனை அவர் மறுத்துள்ளார்

## அபிராமிப்பட்டர் விழா

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் நடாத்தும் அபிராமிப்பட்டர் விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விசேடபூஜை, உதித்தரிசனம், சிலவுத்தரிசனம், வசிந்தமண்டல பூஜை, அபிராமிப் பட்டர் திருவீதியுலா அர்த்தசாமப் பூஜை ஆகியன நடைபெறவுள்ளன.




கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த வைத்தீஸ்வராக் கல்லூரியின் பொன்விழா நிகழ்வில், பத்திரிகையாளர் கோபாலரட்ணம் மங்கள விளக்கேற்றுவதை முதற்படத்திலும், பொன்விழா மலரை பாடசாலை அதிபர் வன்னியசிங்கம் எழுத்தாளர் சிற்பியிடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் மூன்றாவது படத்திலும் காணலாம்.

### நான்காவது டெஸ்ட்டில்

# தென்னாபிரிக்கா 10 விக்கெட்டுக்களால் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வென்றது

(செஞ்சூரியன் பார்க்)

மேற்கிந்தியத் தீவுகள் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் செஞ்சூரியன் பார்க்கில் இடம்பெற்றுவந்த நான்காவது டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்கா 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளதுடன், தொடரையும் கைப்பற்றியது. இரண்டாவது இனிங்ஸில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 348 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.



முன்னதாக முதல் இனிங்ஸில் விளையாடிய தென்னாபிரிக்கா ஆறு விக்கெட்டுக்களை இழந்து 604 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதற்குப் பதிலளித்து முதலாவது இனிங்ஸில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 301 ஓட்டங்களை எடுத்த நிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடத்தொடங்கியது.



இரண்டாவது இனிங்ஸிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 348 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் 45 ஓட்டங்களைப் பெறவேண்டிய தென்னாபிரிக்கா 3.4 ஓவர்களில் தனது வெற்றி இலக்கை அடைந்தது.

கைல்ஸ், சர்வான் இருவரும் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி முறையே 107, 119 ஓட்டங்களைப் பெற்றபோதும் அந்த அணியின் கங்கா, ஸ்மித் இருவரும் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்ததும், மற்றைய முன்னணி வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததும் இரண்டாவது இனிங்ஸிலும் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் கூடுதலான ஓட்டங்களைப் பெறமுடியாமற் போனதற்கு காரணமாகும்.

இரண்டாவது இனிங்ஸில் தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சாளர்களில் பொலக் 4 விக்கெட்டுக்களையும், நிற்னி மூன்று விக்கெட்டுக்களையும், நெல் இரண்டு விக்கெட்டுக்களையும், கலிஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 45 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஆடிய தென்னாபிரிக்கா அணி 3.4 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஓவருக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி 15 ஓட்டங்களை உதிரிகளாக வழங்கியது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா 24 ஓட்டங்களினால் சிம்பாப்வே அணியை வென்றது

(பிரிஸ்பேனில்)

அவுஸ்ரேலிய, இந்திய, சிம்பாப்வே அணிகளுக்கிடையில் அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் போட்டியின் நேற்றைய இந்திய - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டியில், இந்தியா 24 ஓட்டங்களால் சிம்பாப்வே அணியைத் தோற்கடித்தது.



முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் தமது அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தர். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றைய போட்டியில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சச்சின் காயம் காரணமாக விளையாடாததை அடுத்து, கங்கூலியுடன் இணைந்து ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக பார்த்தீவ் பட்டேல் களமிறங்கினார்.

துடுப்பாட்டத்தில் ராகுல் ராவிட், யுவராஜ் சிங் இருவரும் மிகச்சிறப்பாக விளையாடி முறையே 84, 69 ஓட்டங்களைப் பெற்றதுடன் இணைப்பாட்டமாக 114 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் ஸ்ரீக், எர்வின் இருவரும் முறையே 3 விக்கெட்டுக்களையும், பிறைஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி - ஐம்பது ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சிம்பாப்வே அணியின் வேர்முலன் - இர்பான் பதான் வீசிய பந்தினால் வலது கண்ணில் காயமடைந்து ஆட்டத்தை நிறுத்தி வெளியேறினார். இப்ராகிம், எர்வின் இருவரும் 39 ஓட்டங்களையும், பிளவர் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கங்கூலி 3 விக்கெட்டுக்களையும், பாலாஜி 2 விக்கெட்டுக்களையும், நெஹ்ரா, பதான் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அடுத்த போட்டி அவுஸ்ரேலிய - இந்திய அணிகளுக்கிடையில் நாளை சிட்னியில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் சிம்பாப்வே அணி இதுவரை எந்த அணியுடனும் எவ்வித வெற்றியும் பெறாத போதிலும், அந்த அணியின் பந்துவீச்சும், களத்தடுப்பும் மிக உயர்ந்த நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு

# அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் முதல் சுற்றில் ரோடிக், ஹெனின் வெற்றிபெற்றுள்ளனர்

(சிட்னி)

அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் முதல் சுற்றில் ரொடிக், ஹெனின் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

மெல்பேர்னில் அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிகள் நேற்று முன்தினம் தொடங்கின. இதில் முதல் சுற்றில் வெற்றிபெற்றவர்கள் விபரம் வருமாறு:

ஆண்கள் ஒற்றையர் அமெரிக்காவின் ஆன்டி ரோடிக் 6-2, 7-5, 7-6 என்ற செட்களில் சிலி வீரர் பெர்னான்டஸ் கொன்சலசையும், பிரேசில் வீரர் கஸ்டவ் குயர்டன் 5-7, 6-0, 6-1, 2-6, 8-6 என்ற செட்களில் ஜான்வெல் லோட்டமையும், பிரான்சின் செபஸ்தியன் குரோஜியன் 6-1, 6-4, 7-5 என்ற செட்களில் ரஷ்யாவின் யோஸ்நினையும், பின்லாந்தின் ஜார்கோ நியமினன் 6-1, 6-7, 6-2, 6-3 என்ற செட்களில் நிகோலஸ் மாசுவையும் தோற்கடித்தனர். மேலும் அமெரிக்காவின் ஜேம்ஸ் பிளாக் 6-1, 6-4, 6-4 என்ற செட்களில் பெருவைச் சேர்ந்த இவான் மிரண்டாவையும், மற்றொரு அமெரிக்கரான டாட் மார்ட்டின் 4-6, 4-6, 7-6, 7-6, 6-3 என்ற செட்களில் பிரான்சின் அந்தோனி டியூபசையும், தாய்லாந்தின் பாரடான் சிறிசாய்பவன் 7-5, 6-4, 6-0 என்ற செட்களில் ஆர்ஜென்ரீனாவில் ஜோஸ் அகாசோவையும், சுவீடனின் தாமஸ் என்குவிஸ்ட் 4-6, 6-4, 6-4, 7-6 என்ற செட்களில் அமெரிக்காவின் வின்செண்ட் இஸ்பாடியாவையும் தோற்கடித்தனர்.

அகாஷி வெற்றி, நடப்புச் சம்பியனான அமெரிக்காவின் ஆநதிரே அகாஷி 6-1, 6-3, 6-4 என்ற செட்களில் அவுஸ்ரேலியாவின் டாட்லர் கத்தையும், ரஷ்ய வீரர் மாரட்சாவின் 6-2, 3-6, 6-3, 6-4 என்ற செட்களில் பிரியன் வகாலியையும் தோற்கடித்தனர்.

அதிர்ச்சித் தோல்வி உலகின் 6 ஆம் நிலை வீரரான ரெயின் இஸ் கீயூட்லர் 4-6, 4-6, 7-5, 6-3, 6-4 என்ற செட்களில் சுவீடன் வீரர் ராபின் சால்டரிங்கிடமும், பிரான்ஸ் வீரர் அர்னால் கிளமெண்ட் 6-7, 4-6, 6-4, 6-1, 6-2 என்ற செட்களில் ரஷ்யாவின் டேவ்டெங்கோவிடமும் அதிர்ச்சித் தோல்வி அடைந்தனர்.

பெண்கள் பிரிவில் உலகின் முதல்தர வீராங்கனையான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் 6-0, 6-0 என்ற நேர்செட்களில் அவுஸ்ரேலியாவின் டேனியலா ஹண்டுசோவா 7-6, 6-4 என்ற செட்களில் இத்தாலியின் அட்ரியானவையையும், அமெரிக்காவின் லிண்ட்சே டேபன் போர்ட் 6-2, 6-3 என்ற செட்களில் ரொமேனியாவின் டிராகோமிரையும், ஜப்பானின் ஆகிகோ மோரிகாமி 7-6, 4-6, 6-4 என்ற செட்களில் கனடாவின் மேரிஎட்கெலடியரையும், பிரான்சின் அமேலி சிமோ மவுரீஸ்மோ 6-1, 6-0 என்ற செட்களில் தைவான் சுவான்கியா - ஜங்கையும், அமெரிக்காவின் கிரான்விலே 6-1, 6-3 என்ற செட்களில் தாய்லாந்தின் டாமரின் தானாசுகர்னையும், செர்பியாவின் ஜெலினா ஜங்கோவிக் 6-1, 6-4 என்ற செட்களில் ரஷ்யாவின் எலினா டெமன்டிவாவையும், ஹங்கேரியின் அனிகோ காப்ரோஸ் 6-3, 6-3 என்ற செட்களில் ரஷ்யாவின் நாடியா பெட்ராவையும் தோற்கடித்தனர்.

# அடுத்த போட்டியில் பங்குபற்றுவதை சச்சின்தான் முடிவெடுக்க வேண்டும்

## இந்திய கிரிக்கெட் சபை தெரிவிப்பு

(டெல்கி)

காயம் காரணமாக ஓய்வெடுக்கும் சச்சின் டெண்டுல்கர் அடுத்த போட்டியிலாவது பங்குபற்றுவாரா? கிரிக்கெட் ரசிகர்களின் இந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்க இந்தியக் கிரிக்கெட் சபை தயங்குகிறது. அந்த முடிவை சச்சின்தான் எடுக்கவேண்டும் என்கிறது.

இந்தியக் கிரிக்கெட் முகாமையாளர் ஷில்வா யாதாவிடம் கேட்டபோது, அணியின் டொக்டர் ஆன்ட்ரூ லீபஸ் கொடுத்த அறிவுரைப்படி சச்சினுக்கு இப்போது சிகிச்சை கொடுத்து வருகிறோம். அடுத்த போட்டியில் அவரை விளையாடுமாறு நாங்கள் வற்புறுத்த மாட்டோம். அந்த முடிவை சச்சின்தான் எடுக்கவேண்டும். அவர் விரைவில் களமிறங்குவார் என்று நம்புகிறேன். எங்கள் வற்புறுத்தலுக்காக விளையாடி அவரது காயம் அதிகரித்துவிட்டால் அணிக்குத்தானே இழப்பு என்கிறார்.

இதே கருத்தைத்தான் பயிறசியாளர் ஜோன் ரைட்டும் சொல்கிறார். சச்சினை நாங்கள் விளையாடச் சொல்லமுடியாது. காயம் குணமடைந்துவிட்டதாக நினைத்தால் அவர் எப்போது வேண்டுமானாலும் விளாசலாம். முடிவு அவர் கையில்.



அதே சமயம் விளையாட வேண்டாம் என்று முடிவு செய்து விட்டால் அவரை யாரும் தடுக்கமுடியாது. கடுமையான வலியையும் கூட பொறுத்துக் கொண்டு உள்ளே இறங்கிவிடக் கூடியவர் என்கிறார் ரைட்.

முத்தரப்புத் தொடரில் இந்தியா தனது அடுத்த போட்டியில் நாளை அவுஸ்ரேலியாவைச் சந்திக்கிறது. இந்த ஆண்டு அரம்பம் முதல் சச்சின் நன்றாக விளையாடி வருகிறார். இந்த ஆண்டு தொடங்கி 20 நாட்களில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அவர் 500 ஓட்டங்களை நெருங்கியுள்ளார்.

# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஜனநாயக முற்போக்கு கூட்டணி எனபெயர்

தமிழகத்தில் தி.மு.க தலைமையில் அமைக்கப்பட்டுள்ள கூட்டணிக்கு ஜனநாயக முற்போக்கு கூட்டணி (ஜ.மு.கூ) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அண்ணா அறிவாலயத்தின் தி.மு.க மாவட்டச் செயலாளர்களுடன், நாடாளுமன்றத் தேர்தல் குறித்து ஆலோசனை நடத்திய கருணாநிதி பின்னர் நிருபர்களிடம் பேசுகையில்,

இந்தக் கூட்டணி மத்தியிலும் மாநிலத்திலும் மதசார்பற்ற, ஜனநாயக அரசை அமைக்கப் பாடுபடும் தி.மு.க. வின் தேர்தல் அறிக்கையைத் தயார்செய்வதற்காக - டி.ஆர்.பாலு தலைமையில் 9 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அநேகமாக விருதுநகர் மாநாட்டின்போதே, தேர்தல் அறிக்கை வெளியிடப்படக்கூடும்.

மாநாட்டுக்கு, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை அழைக்கலாம் என்று யோசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முடிவெடுத்து முறையாக அழைப்பு விடுக்கப்படும்.

தேசிய ஜனநாயக் கூட்டணியில் இருந்து தி.மு.க. தற்காலிகமாகவே விலகியிருப்பதாக, பா.ஜ.க. பொதுச் செயலாளர்களில் ஒருவரான பிரமோத் மகாஜன் கூறியிருக்கிறார். தேர்லுக்குப் பின் மீண்டும் பா.ஜ.க அணியில் நாங்கள் சேருவோம் என்றும் கூறியிருக்கிறார். அது அவரது சொந்தக்கருத்து. இனி பா.ஜ.க கூட்டணியில் தி.மு.க. சேரவே சேராது.

ஜாதிக் கட்சிகளுக்கு தி.மு.க கூட்டணியில் நிச்சயமாக இடமில்லை. தலித் என்றால் ஒதுக்கப்பட்டவர்கள். சமூகத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பவர் என்றுதான் பொருள். அரசியல் கட்சி என்று பொருள் வராது. புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி எனக்கு பொங்கல் வாழ்த்துக் கூறினார். ஆனால், திருமாவளவன் இதுவரை என்னை வந்து பார்க்கவில்லை என்றார்.

# சோனியா காந்தியின் தொகுதியில் ராகுல், பிரியங்கா சுற்றுப்பயணம்

(சென்னை)

சோனியா காந்தியின் சொந்தத் தொகுதியில் அவருடைய மகன் ராகுல், மகள் பிரியங்கா ஆகியோர் 3 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். இதனால், அவர்கள் அரசியலில் குதிக்க முடிவு செய்துவிட்டதாக ஊகங்கள் எழுந்துள்ளன.

நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு விரைவில் வெளியாகும் நிலையில், அரசியல் கட்சிகள் தேர்தல் பணியில் தீவிரம் காட்டிவருகின்றன. தேசிய ஜனநாயக் கூட்டணிக்கு எதிராக பாரிய கூட்டணி அமைக்கும் முயற்சியாக காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி மதசார்பற்ற கட்சிகளை ஓரணியில் திரட்டிவருகிறார்.

இந்த நிலையில், மேற்கு உத்தரப் பிரதேச மாநிலத்தில் சோனியா காந்தி சமீபத்தில் 3 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணம் காங்கிரஸின் தேர்தல் பிரச்சார தொடக்கமாக அமைந்தது. வழி நெடுகிலும் அவர் மக்களை சந்தித்து காங்கிரஸுக்கு ஆதரவு திரட்டினார்.

இதற்கிடையில் சோனியா காந்தியின் சொந்தத் தொகுதியான உத்தரப் பிரதேச மாநிலம் அமேதி தொகுதியில் அவருடைய மகன் ராகுல் காந்தி, மகள் பிரியங்கா ஆகியோர் நேறறு முதல் 3 நாட்கள் சுற்றுப்பயணம் செய்கிறார்கள். இருவரும் கட்சி ஊழியர்களை நேரில் சந்தித்து தேர்தல் பணிகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

'சோனியாவின் மகன், மகள் இருவரும் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்வது இதுவே முதல் தடவை என்று கூறிய உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவர் ஒருவர் தேர்தலுக்கு 2 மாதங்களே உள்ள நிலையில் அவர்களின் சுற்றுப்பயணம் முக்கியததுவம் வாய்ந்ததாக கருதுவதாக தெரிவித்தார். தேர்தலின்போது பிரியங்கா, சோனியாவின் தொகுதி அலுவலக நிர்வாகியாகவும் இந்தப் பணியில் பிரியங்காவுக்கு உதவியாக ராகுல் செயற்படுகின்றார்.

# புவியியல்
## விபரணப் புள்ளிவிபரவியல்

I.S.ஜெகன்- B.A(Hons).Geo.Spl

இந்தச் சராசரி விலகலினை
1. கோட்டு வரைபடம்
2. நிரல் வரைபடம் என்பனவற்றில் அமைத்துக் காட்டலாம்.






1 →மிகை 2 → குறை

நியம விலகல் (Standard Deviation)

சராசரி விலகல் அளவுகளை வர்க்கித்து அவற்றைக் கூட்டி மொத்த உறுப்புக்களால் வகுத்து அவற்றிற்கு வர்க்கமூலம் காண்பதனூடாக நியமவிலகல் பெறப்படுகின்றது. இதனைக் கணிப்பதற்கான சூத்திரம் பின்வருமாறு

$$SD = \sqrt{\frac{\Sigma (X-\bar{X})^2}{n}}$$

உதாரணம் -

| X | $\bar{X}$ | $(x-\bar{x})$ | $(x-\bar{x})^2$ | | |
|---|---|---|---|---|---|
| 70 | 78 | -8 | 64 | | |
| 72 | 78 | -6 | 36 | | |
| 79 | 78 | +1 | 1 | | |
| 84 | 78 | +6 | 36 | | |
| 85 | 78 | +7 | 49 | | |
| Total | | | 186 | | |

$SD = \sqrt{\frac{186}{5}}$
$= \sqrt{37.5}$
$= 6.1$

இதன் பின்னர் சராசரி விலகலிலிருந்து நியமவிலகலைக் கழிக்க நியமச் சராசரி விலகல் பெறப்படும். இதனை ஆதாரமாகக் கொண்டே நியமச்சராசரி விலகல் வரைபடம் வரையப்படுகின்றது.

### பிரிக்கை வரைபடம் (Dispersion Diagram)

சிதறல் வரைபடங்களில் ஒன்றே பிரிக்கை வரைபடமாகும். தரவுகளைப் புள்ளிகளாகச் சிதறி அவற்றில் இருந்து முடிவுகளைப் பெறுவதற்கு பிரிக்கை வரைபடங்கள் பயன்படுகின்றன. இதிலிருந்து காலணைகளைக் கணிப்பிட முடியும்.

உதாரணம் - இலங்கையின் உப்பு உற்பத்தி

| ஆண்டு | தொகை (தொன்) | | |
|---|---|---|---|
| 1948 | 77500 | 1956 | 106500 |
| 1949 | 28500 | 1957 | 80100 |
| 1950 | 66850 | 1958 | 17850 |
| 1951 | 25850 | 1960 | 28500 |
| 1952 | 45308 | 1961 | 52400 |
| 1953 | 57100 | | |
| 1954 | 50435 | | |
| 1955 | 38900 | | |

கூடிய பெறுமதி 106 500
குறைந்த பெறுமதி 17 850
∴ வீச்சு = 88 650
∴ அளவுத்திட்டம் 1cm = 10 000 T எனக்கொள்ளலாம்.

$Q_1 = \frac{n+1}{4}^{\text{th}}$ ஈட்டு
$= \frac{13+1}{4}$
$= 3.5^{\text{th}}$ ஈட்டு

$Q_2 = \frac{n+1}{2}$
$= 7^{\text{th}}$ ஈட்டு

$Q_3 = \frac{n+1}{4} \times 3$
$= 10.5^{\text{th}}$ ஈட்டு

$Q_1 = 28325$
$Q_2 = 50435$
$Q_3 = 71000$




பயிற்சி

1. இந்தத் தரவுகளைப் பயன்படுத்தி மீடிறன் பரம்பல் ஒன்றைப் பின்வரும் வகுப்பு இடைவெளிகளின் அடிப்படையில் அமைக்க.

1. வகுப்பு இடைவெளிகள்

| | |
|---|---|
| 50 - | 149 |
| 150 - | 249 |
| 250 - | 349 |
| 350 - | 449 |
| 450 - | 549 |

2. பகுதியின் படி பெற்ற மீடிறன் பரம்பலைப் பயன்படுத்தி ஒரு இழை வரையத்தை வரைந்து அதே படத்தில் மீடிறன் பல்கோணியையும் வரைக.

(தொடரும்...)

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

ஒரு கிராமத்திலே பேராசை உடைய மனிதன் இருந்தான். பணம் சேர்ப்பதில் அவனுக்கு தீராத ஆசை. வயிறார உண்ணமாட்டான். நல்ல உடை அணியமாட்டான். வேறு காரியங்களுக்கு பணம் செலவு செய்யமாட்டான். உழைத்த பணத்தைப் பெட்டியில் வைத்து தனது காணியின் ஒரு பழைய கட்டடத்தின் மூலையில் புதைத்து வைத்தான். அவன் பண ஆசை கொண்டதால், ஒவ்வொரு நாளும் பணப் பெட்டியைத் திறந்து எண்ணிப்பார்ப்பான். அப்படி தினமும் செய்து சந்தோஷப்படுவான். ஒரு நாள் வழமைபோல் அங்கு போய் பார்த்தான். பெட்டி திறந்து இருப்பதைக் கண்டு ஏங்கிப்போய் அவசரமாகப் பெட்டியை கையில் வைத்து தேடினான். பணமில்லை ஒரு கடதாசித் துண்டுதான் கிடைத்தது. அதில் பணத்தைச் சேர்த்தால் அதைப் பயன்படுத்த வேண்டும் பதுக்கி வைக்கக் கூடாது.

மேலேயுள்ள பந்தியிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

01) இந்தப் பந்தியை வாசிக்கும்போது, இந்த மனிதன் எப்படிப் பட்டவன்?
02) மனிதன் எவ்வாறு பணத்தைச் சேர்த்தான்?
03) பணத்தை எங்கு, எதற்குள் வைத்தான்?
04) பெட்டியினுள் இருந்த கடதாசித் துண்டில் என்ன எழுதப்பட்டிருந்தது?
05) பணம் திருட்டுப் போய்விட்டது என்று எப்படி அறிந்தான்?
06) வயிறார உண்ணமாட்டான் என்பதை உணர்த்தும் சொல்?
07) இந்தக் கதையை வாசிக்கும்போது ஒரு பழமொழி நினைவுக்கு வரும். அதை எழுதுக?

பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொல் தருக
08) பதுக்கிவைத்தல் 09) சந்தோஷம்

பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துள்ள சொல் தருக
10) பேராசை 11) அவசரமாக

பந்தியிலுள்ள வினைச் சொற்கள் இரண்டு தருக
12)...................... 13)......................

பின்வரும் சொற்களை ஆங்கில மொழியில் எழுதுக
14) கிராமம் 15) சந்தோஷம்

சரியான விடைக்குரிய எண்ணை புள்ளிக் கோட்டில் எழுதுக

16) மின் வெட்டு நாளை முதல் அமுலுக்கு வருகின்றது. இதற்கு காரணம்
1) மின்மாற்றிகள் பழுதடைந்து விட்டமை
2) நீர்த் தேக்கங்களில் நீர் வற்றிவிட்டமை (......)

17) வெள்ளம் ஏற்படும்போது வியாபாரிகள் பொருட்களின் விலையை உயர்த்துகின்றனர் வியாபாரிகளின் இந்தச் செயல் எதற்கு ஒப்பான தாகும்
1) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளல்
2) எரிகிற வீட்டில் பிடுங்குகிறது இலாபம் (......)

18) சந்தையில் அடிக்கடி விலை மாற்றம் அடையக்கூடிய பொருள்
1) சீனி, அரிசி, கோதுமை மா, பருப்பு போன்றவை
2) மீன், கீரை, தேசிக்காய், கரட் போன்றவை (......)

19) சமூக விரோதச் செயலாகக் கருதக்கூடியது
1) பாடசாலை செல்லாமைக்குப் பொய்ச்சாட்டு கூறி கடிதம் எழுதல்
2) குறித்த நிறுவனங்களுக்கு அறிவிக்காமல் திருட்டுத்தனமா மின்சாரம் பெறல் (......)

20) ஆனைக்கும் அடி சறுக்கும் என்பது
1) ஆனை பாரத்தைத் தூக்கும் அடி சறுக்கி விழும் என்பதாகும்
2) கெட்டிக்காரனும் சில நேரங்களில் பிழைவிடுவான் என்பதாகும் (......)

படங்கள் சேகரிக்கும் A, B, C, D, E, F, G ஆகிய ஏழு பிள்ளைகளும் சேகரித்து வைத்திருந்த படங்களின் விபரங்களை பற்றிய அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அவற்றைப் பயன்படுத்திக் கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக




21) G யிடம் உள்ள படங்களின் எண்ணிக்கையிலும் 50 குறைவாக A வைத்திருந்தான் எனின், A வைத்திருக்கும் படங்களின் எண்ணிக்கையை வரைபின் உரிய இடத்தில் குறித்துக்காட்டுக
22) கூடுதலான படங்கள் வைத்திருப்பவர் யார்?
23) சமமான எண்ணிக்கையுடைய படங்கள் வைத்திருப்பவர் யார்?
24) C தன்னிடமுள்ள படங்களின் அரைப்பங்கை அவனுடைய நண்பனுக்குக் கொடுத்தால், அவனிடம் தற்போது எத்தனை படங்கள் உண்டு
25) B யிடமும் E யிடமும் இருக்கும் படங்களின் எண்ணிக்கை யாது?
26) ABCDEFG ஆகிய ஏழு பிள்ளைகளும் வைத்திருக்கும் படங்களின் எண்ணிக்கை யாது?
27) குறைந்த எண்ணிக்கையுடையவர் யார்?
28) ஒரு வட்டத்தின் 3/8 பங்கை நிழற்றுக?



29) பின்வரும் A,B ஆகிய படங்களில் நிறந்தீட்டப்பட்ட பகுதியை C வட்டத்தில் நிறந்தீட்டிக் காட்டுக




30) ixvii +xxxvi = ☐ ஆகிய உரோம எண்களின் கூட்டுத் தொகையை எண்ணில் எழுதுக
31) 1 1/2 kg அரிசியின் விலை ரூபா 120.00 எனின், 2 1/2 kg அரிசியின் விலை யாது?
32) 1 வாரம் 4 நாள் 10 மணித்தியாலம் எத்தனை மணித்தியாலங்கள்?

33) காயத்திரி ஒருவருக்கும் கொடுக்காது கொண்டு சென்ற மலர்ச் செடியை நடுவதற்கு முயற்சிக்கவில்லை இதில்
1) போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
2) வைக்கோற் பட்டடை நாய்.
3) அகத்தின் அழகு முகத்தில் தெரியும். (.......)

34) ஒரு பூவிற்கு எப்பொழுதும் இருப்பது
1) மனம் 2) நிறம் 3) குணம்

35) காற்றால் பறக்கும் வித்துடைய தாவரச் சோடி எது?
1) தேங்காய், பொன்னொச்சி 2) மாங்காய், பலா
3) குறிஞ்சா, பொன்னொச்சி 4) குறிஞ்சா, வாழை

36) விளையாடும் சந்தர்ப்பத்தில் எடுக்கத்தக்க மிக உயர்ந்த ஆகாரம் எது?
1) இறைச்சி 2) குளுக்கோஸ் 3) சோறு 4) முட்டை

37) நெல் அதிகமாகப் பயிரிடப்படும் இடம் எது?
1) நீர்கொழும்பு 2) கிளிநொச்சி 3) கண்டி 4) இரத்தினபுரி

38) பயிர்களுக்கு நோய் ஏற்பட்டுள்ளதன் அறிகுறி
1) வளர்ச்சி குன்றல் 2) இற்றுப்போதல்
3) நிறம் மறுதல் 4) புதிய தளிர்கள் தேன்றும்

39) இலங்கையில் வீசும் பருவக்காற்று அல்லாதது
1) வடகீழ்ப் பருவக்காற்று 2) தென்மேல்ப் பருவக்காற்று
3) சூறாவளி

40) வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களில் இதுவும் ஒன்றாகும்
1) குருநாகல் 2) மிகிந்தலை
3) கம்பளை 4) யாழ்ப்பாணம்

41) இலைகள் அற்ற தாவரம் ஒன்று
1) தாழை 2) நாகதாளி 3) முருங்கை 4) வேம்பு

இல 42 முதல் 46 வரை உள்ள சொற்களை ஆங்கிலத்தில் எழுதினால் சரியான சொல் எது

42) 1) GRAND MOTHER 2) GERAN MOTHER 3) GROND MOTHER

43) 1) PRALOCK 2) DECEMBER 3) PAECOCK
44) 1) DCEEMBER 2) DECEMBER 3) EIGHTEN
45) 1) FIGTHEEN 2) EIGHTEEN 3) EIGHTEN
46) 1) GARPES 2) GRAPCS 3) GRAPES

இல 47 முதல் 51 வரை பின்வரும் சொற்களைச் சிங்கள மொழியில் எழுதுக

47) சிநேகிதன் 48) நாய்
49) வானம் 50) நான்கு 51) முட்டை

52) "நான் அடர்ந்த காட்டுக்குச் சென்றால்" என்ற தலைப்பில் எழுவாய் பயனிலையுடன்கூடிய கருத்துள்ள ஆறு வாக்கியம் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்கள் கொண்டிருக்க வேண்டும். (தொடரும்...)

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2004 - ஏப்ரல்

## தமிழ் பகுதி

பின்வரும் செய்யுட் பகுதிகளில் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து

அ) அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ) தடித்த எழுத்தில் தரப்பட்ட பகுதிகளின் சிறப்பை விளக்குக.

01. i) ஞாயும் யாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிந்தும்
செம்புலப் பெயர் நீர்போல்
அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே

ii) பணியுமாம் என்றும் பெருமை - சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து
அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் - வாய்மையோடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்
அரம்போலும் கூர்மை யரேனும் மரம்போல்வர்
மக்கட் பண் பில்லாதவர்
நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத்தற்று

iii) என்றன னிறவலை நோக்கி யேற்றதும்
நின்றனன் பரதனு நிமிர்ந்த சேனையைப்
பின்றரு சென்றுதன் பிரிவில் காதலின்
தன்றுனைத் தம்பியுந் தானு முந்தினான்
தொழுதுயர் கையினன் றுவண்ட மேனியன்
அழுதழி கண்ணின னலை மிகேன
எழுதிய படிவமொத் தெய்து வானனை
முழுதுணர் சிந்தையான் மூடிய நோக்கினான்

iv) உன் நபிகளில் ஒருவர் நம்
தளத்துடன் எனது சிகரத்தின் மீது
தாவியே பறந்து செல்கின்றார்
தெளிவின் என்னிடத்தில் இழிந்திலர் உன்னைத்
தொழுதிலர் திக்குறு செய்திலரே
இது அலாது எனைச் சூழ்தர உனக்கு இணையாய்
இயற்றிய புத்துகளினை வைத்து

02. ஆ) பின்வரும் கவிதையைப் படித்து அதன்கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக

### உதிர்ந்த மலர்கள்

முள்ளுடைச் சிறு செடியின் - கனலாய்
மூண்டு சிரித்த மலர்
கள்ளெனும் பொக்கிசத்தால் - விம்மியே
கர்வம் அடைந்த மலர்
பனித்துளி மணிசூடித் தென்றலின்
பாட்டினைக் கேட்டமலர்
கணிந்துள விண்ணதன்கீழ் மௌனக்
கல்வியைக் கற்றமலர்
அந்திச் சிலம்பினையும் விண்மீன்
அழகின் விழிப்பினையும்
சிந்தையிற் கொண்ட மலர் - மனமே
செய்து திகைத்த மலர்
வீழ்ந்து கிடக்குதையோ உச்சி
வெயிற் சுடலையிலே
வாழ்வின் விருப்பங்களை மண்ணிலே
வரைந்துள்ளதோ வண்டே

i) உதிர்வதன் முன் மலர் இருந்த நிலை.
ii) உதிர்ந்த மலர் கவிஞரின் உள்ளத்தில் எழுப்பும் உணர்ச் சியை விளக்குக.
iii) இந்தக் கவிதை ஊடாக கவிஞர் கூறவந்த கருத்து யாது? விளக்குக. (தொடரும்...)

ஆசிரியர் என்.பாலா ~ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

இங்கே மடிக்கவும்



# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2004 - ஏப்ரல்

## கணக்கீடு

(சென்றவாரத் தொடர்ச்சி...)

21. வருட வாடகை ரூபா 24,000. 7 மாத வாடகை செலுத்தப் பட்டால் சென்மதி வாடகை யாது?
(1) ரூபா 10,000.
(2) ரூபா 14,000.
(3) ரூபா 12,000.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

22. பற்று
(1) நிறுவனத்தில் வேலையாற்றும் உரிமையாளரின் மனைவியின் சம்பளம.
(2) உரிமையாளர் சொந்தத்தேவைக்கு நிறுவனக்காசை அல்லது பொருளை எடுத்தல்.
(3) உரிமையாளர் நிறுவனத்தின் மேல் கொண்டுள்ள விருப்பம்.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

23. பழைய கொடுக்குமதி தற்போது காசாகச் செலுத்தப்பட்டது. இது எதில் வரவு.
(1) காசு. (2) கடன்கொடுத்தோர்.
(3) செலவில். (4) கடன்பட்டோர்.

24. ஒரு கடன்கொடுத்தோருக்கு ரூபா. 60,000 ஐ தீர்க்க ரூபா 55,000 இற்கும் 3 மாத உண்டியலை ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ் வித்தியாசம் குறிப்பது
(1) பெற்றகழிவு. (2) கொடுத்தகழிவு.
(3) தவறு. (4) மேற்கூறிய எவையுமல்ல.

25. பின்வருவனவற்றுள் உரிமையாளரின் உரிமையை வெளிப்படுத்தும் கணக்கீட்டுச் சமன்பாடு.
(1) மூலதனம் + பொறுப்புக்கள் = சொத்து.
(2) சொத்து - பொறுப்பு = மூலதனம்.
(3) சொத்து - மூலதனம் = பொறுப்பு.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

26. உரிமையாண்மையில் மட்டும் தாக்கம் ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்
(1) பொருட் பற்று.
(2) உபகாரப் பங்கு வழங்கல்.
(3) பங்காளர் விலகுதல்.
(4) உரிமையாளர் வங்கிக் கடனைத் தீர்த்தல்.

27. சொத்துக்களில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்துவது
(1) நிலையானசொத்துக் கொள்வனவு. (2) விற்பனை.
(3) கொள்வனவு. (4) மேற்கூறிய எவையுமல்ல.

28. பெறுமானத்தேய்வு
(1) நிலையான சொத்துக்களுக்கு நிரந்தரமாக ஏற்படும் பெறுமதிக் குறைவு.
(2) சொத்துப் பழுதடைவு.
(3) பெறுமானத்தேய்வு செய்யத்தக்க தொகையை சொத்தின் ஆயுள் பூராகப் பொருத்தமான அடிப்படையில் பங்கீட்டுச் சாட்டுதல் செய்தல்.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

29. கிரயம்
(1) வளத்திற்கான பணப்பெறுமதி.
(2) அன்றாடச் செலவுகள்.
(3) காசாகச் செய்த செலவுகள்.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

30. தரிசனப்படுத்தப்படாத காசோலை
(1) வைப்பிலிட்டு இன்றுவரை பணம் கூட்டப்படாத காசோலை.
(2) எழுதிக் கொடுத்து வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை.
(3) மேற்கூறிய இரண்டும்.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

31. செலவு வைக்கப்படாத காசோலை
(1) வைப்பிலிட்டு இன்றுவரை பணம் வசூலிக்கப்படாத காசோலை.
(2) எழுதிக் கொடுத்து வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை.
(3) காசோலை தொலைந்தால் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

32. பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின்படி கணக்கீடுகள் இருக்க வேண்டியது
(1) பாதுகாப்பான இடத்தில்.
(2) ஏதாவது ஒரு கிளையில்.
(3) தலைமையகத்தில்.
(4) மேற்கூறிய எவ்வையுமில்லை.

33. பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின்படி பங்காளர் கடனுக்கான வட்டி
(1) தேசிய சேமிப்பு வங்கி தனது சேமிப்புக் கணக்கிற்கு வழங்கும் வட்டி வீதம்.
(2) மக்கள் வங்கி வழங்கும் வட்டி வீதம்.
(3) 6% (4) மேற்கூறிய எவையுமல்ல

34. மீள்மதிப்பீட்டின் எந்த இலாபமும்
(1) பழைய இலாப விகிதத்தில் பழைய பங்காளர்களுக்குச் செலவு வைத்தல்.
(2) புதிய இலாப விகிதத்தில் புதிய பங்காளர்களுக்குச் செலவு வைத்தல்.
(3) பழைய இலாப விகிதத்தில் பழைய பங்காளர்களுக்கு வரவு வைத்தல்.
(4) பழைய இலாப விகித்தில் புதிய பங்காளர்களுக்கு வரவு வைத்தல்.

35. பங்கு வட்டம் பாவிக்க முடியாதது
(1) நன்மதிப்பை பதிவழிக்க. (2) உபகாரப்பங்கு வழங்க.
(3) மூலதனக்குறைப்பிற்கு. (4) மேற்கூறிய எவையுமல்ல.

36. மூலதன மீட்பு ஒதுக்கம்
(1) ஓர் வருமான ஒதுக்கம். (2) இரகசிய ஒதுக்கம்.
(3) சட்டரீதியான ஒதுக்கம். (4) மேற்கூறிய எவையுமல்ல.

37. பொறுப்புத்தரகு
(1) ஒப்படைகொள்வோன் விற்பனைச் சேவையைச் செய்வதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு.
(2) ஒப்படைகொள்வோன் கடன் விற்பனை சேவையைச் செய்வதற் காக வழங்கப்படும் தரகு.
(3) ஒப்படை கொள்வோன் கடன் விற்பனையால் ஏற்படும் அறவிட முடியாக்கடனைப் பொறுப்பேற்கும் சேவையைச் செய்வதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு.
(4) மேற்கூறிய எதுவுமல்ல.

38. பின்வருவனவற்றுள் எது நிலையான சொத்து முடிவுசெய்தல் அல்ல.
(1) தளபாடம் காசிற்கு விற்பனை.
(2) மோட்டார் கடனுக்கு விற்பனை.
(3) பொறி மறுபடி விலைமதித்தல்.
(4) அலுவலக உபகரணம் பகுதிமாற்று.

39. முன்னுரிமைப் பங்குகள் மீட்கும்போது அவை
(1) முகவிலை வரை அழைத்து இறுக்கப்பட்டிருந்தல் வேண்டும்.
(2) எப்படியிருப்பினும் மீட்கமுடியும்.
(3) கட்டாயாக புதிய பங்கு வழங்கப்படவேண்டும்.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

40. உபகரண வழங்கல்
(1) பொதுமக்களுக்கு பங்கு வழங்கல்.
(2) பங்குதாரருக்குப் பங்கு வழங்கல்.
(3) பங்குதாரருக்குக் காசுக்குப் பங்கு வழங்கல்.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

ஆசிரியர்- D.S.A.M, உடுவில் மகளிர் கல்லூரி

## தபால் சேவையை சீராக்குவது குறித்து
# புலிகள் - தபால்மா அதிபர் பேச்சு நடத்த தேசப்பற்று முன்னணி எதிர்ப்புத்தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தபால் விநியோகத்தைச் சீராக மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ள தபால் மா அதிபருக்கு தேசப்பற்று முன்னணி தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, அந்த முன்னணி மேலும் தெரிவித்துள்ளதாவது -

வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் தபால் பொதிகளை செல்லவிடாது விடுதலைப்புலிகள் தமது நடவடிக்கைகள் மூலம் தடுக்கின்றார்கள். மிகவும் பொறுப்புள்ளவர்களாக இவர்கள் இருந்தால், வடபகுதி மக்களின் இந்தச் செயற்பாட்டிற்குத் தடையாக இருக்கமாட்டார்கள்.

அதேநேரம், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், விடுதலைப் புலிகள் அரச நிர்வாகங்களில் தலையிடுகின்றனர். இதனால், வடக்கு - கிழக்கு மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அல்லது கண்காணிப்பு குழுதான் புலிகளுடன் பேசி இதற்கு உதவியைப் பெறவேண்டுமெனவும் அது மேலும் தெரிவித்துள்ளது.





# தாரகா மலர்வு மையத்தால் பல்வேறு உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தல்

சாவல்கட்டு 'தாராகா மலர்வு மையத்தினரால்' பல்வேறு கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, சந்தைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாவல்கட்டு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்டவர்களால் ஒன்று சேர்ந்து உருவாக்கப்பட்ட இந்த 'தாராகா மலர்வு மையத்தில்' இவ்வாறான சுமார் 75 அங்கத்தவர்கள் இருப்பதாகவும்,

இவர்கள் தமது ஓய்வு நேரங்களில் மேற்படி மலர்வு மையத்திற்கு என சுதுலை தெற்கில் கொள்வனவு செய்யப்பட்ட பணிமனைக்குச் சென்று அங்கு - பெட்டி, பாய், கடகம், சுளகு போன்ற பலவகையான கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வதுடன், இவர்களின் பிள்ளைகளால் வர்ண வாழ்த்துக்கள், வர்ணக் கலண்டர்கள் என்பனவற்றை வரைந்தும், பல இயற்கைப் படங்கள் என்பனவற்றையும் வரைந்து இவை அனைத்தையும் சந்தைப்படுதிவருகிறது.

இவ்வாறு சந்தைப்படுத்தல் மூலம பெறப்படும் நிதியினை தாராகா மலர்வு மையத்திற்கு என உருவாக்கப்பட்டுள்ள வங்கிக்கணக்கில் வைப்பிலிட்டு, அங்கத்தவர்களுக்கு வேண்டியபோது தேவையான உதவிகளை வழங்கி வருவதாகவும் சங்கத் தலைவி தெரிவித்தார்.

அத்துடன், இந்த மையத்தில் வாராந்தம் பயிற்சி, விழிப்பூட்டல் பயிறசிகள் என்பனவும் நடத்தப்பட்டு வருவதாகவும்,

இதற்காக அந்தப்பகுதி கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், சுகாதார பரிசோதகர், குடும்ப நல மாது, சாந்தியகத்தின் வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் என்போரின் உதவிகளையும் பெற்றுச் செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(44)

# யாழ்.பஸ் நிலைய சூட்டு சம்பவம்; சிப்பாயின் பிணை மனு நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பஸ் நிலைய சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான இராணுவச் சிப்பாயின் பிணை மனு நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ். நீதவான் நீதிமன்றில் நடைபெற்றபோதே, பிணை அனுமதி கோரி இராணுவத்தினரின் சட்டத்தரணி குருப்பு மனுவொன்றை தாக்கல் செய்தார்.

இவரது பிணை மனுவை நிராகரித்த நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் - சந்தேக நபரை எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். குறித்த இராணுவச் சிப்பாய், இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிமன்றால் நடாத்தப்பட்ட அடையாள அணிவகுப்பின் போது, அடையாளம் காணப்படாமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பாகக் கைதுசெயயப்பட்ட ஏனைய இரண்டு இராணுவத்தினருக்கும் ஏற்கனவே பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும், இவர்கள் இருவரும் இதுவரை பிணையில் எடுக்கப்படவில்லை. இவர்கள் மீது நம்பிக்கையீனமாக உள்ளதாக 512 ஆவது படைத்தள அதிகாரி பிணையை எடுக்க மறுத்துள்ளார்.

கொழும்பிலிருந்தே இவர்களை பிணையில் எடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற ஜப்பானிய கலைகலாச்சார நிலையத்தினூடாக குடாநாட்டு மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் மதகுருமாரோடு ஜப்பான் பிரதிநிதியும் இணைந்து உபகரணங்களை வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம்.

# தியாகி அறக்கொடை நிதியத்தின் ஏற்பாட்டில் ஆடை உற்பத்தி நிலையம் நிறுவப்படவுள்ளது

தியாகி அறக்கொடை நிதியத்தின் ஏற்பாட்டில், விரைவில் ஆடை உற்பத்தி நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது.

ஏழைகள் மற்றும் விதவைகளுக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், இந்த தைத்த ஆடை உற்பத்தி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

கோயில் வீதியிலேயே இந்த தைத்த ஆடை உற்பத்தி நிலையம் அமையவுள்ளதாக அந்த நிலையத்தைச் சேர்ந்த ஆலோசகர் ஒருவர் தெரிவித்தார்.

தியாகி அறக்கொடை நிதியத்தால், மூன்று நிலையங்களில் தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பயிற்சி பெறுவோர் மட்டுமன்றி, தையல் வேலையில் சிறந்த ஆற்றலுள்ள வேறு சிலரும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

அடுத்த மாதம் 15 ஆம் திகதியளவில் இந்த நிலையம் திறந்து வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதைவிட தியாகி அறக்கொடை நிதியத்தால் தேயிலை, அரிசிமா முதலானவை பைகளில் அடைக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

இதன்மூலம் கிடைக்கக்கூடிய வருவாயைக் கொண்டு தியாகி அறக்கொடை நிதியத்தால் மேற்கொள்ளப்படும் அறப்பணிகளை விரிவுபடுத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ப)

# மீனவர்களால் எடுத்து வரப்பட்ட ஒயில் பரல் கரையிலிருந்த படையினரால் பறிமுதல்

கடற்பரப்பில் மிதந்து வந்ததாகத் தெரிவித்து, மீனவர்களால் எடுத்து வரப்பட்ட ஒயில் பரல் ஒன்றைக் கரையில் வைத்துப் படையினர் பறித்தெடுத்த சம்பவமொன்று நேற்றுமுன்தினமிரவு சக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

சக்கோட்டை கடற்பரப்பில் மிதந்து வந்ததாகத் தெரிவிக்கப்படும் ஒயில் பரல் ஒன்றை, அங்கு மீன்பிடித் தொழில் ஈடுபட்ட மீனவர்கள் சிலர் கண்டுள்ளனர். சுமார் இருபதினாயிரம் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய இந்த ஒயில் பரலை மீட்டெடுத்த அவர்கள், கவனமாகக் கரைக்குக் கொண்டுவந்து சேர்ந்தனர்.

எனினும், கரையோரக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த படையினர், அந்த ஒயில் பரலினுல் வெடிபொருடகள் இருக்கலாமெனக் கூறி, அதனைப பறிமுதல் செய்துவிட்டதாகத் தெரியவருகின்றது. ஆயினும், அதில் ஒயில மட்டுமே இருந்ததாகக் கூறி, தம்மிடம் கையளிக்குமாறு விடுத்த கோரிக்கையினையும் படையினர் நிராகரித்து விட்டதாக மீனவர்கள் தரப்பில கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

# பொலித்தீன் பாவனையை கைவிடுமாறு அரச நிறுவனங்களுக்கு சுற்றுநிருபம்

(யாழ்ப்பாணம்)

அரச நிறுவனங்களில் பொலித்தீன் உற்பத்திப்பொருட்களின் பாவனையைக் கைவிடுதல் தொடர்பான சுற்றறிக்கை ஒன்று, அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டு, சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத தலைவர்கள், அரச கூட்டுத்தாபன நியதிச்சட்டசபைத் தலைவர்கள் போன்றோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் - சூழலுக்கு ஏற்படும் கேடுகளைக் குறைப்பதற்காகப் பொலித்தீன் பைகள் அடங்கலாகப் பல்வேறு பொலித்தீன் உற்பத்திகள் - அரச அலுவலங்கள், கட்டடங்கள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள் போன்ற இடங்களில் பாவனையைத் தடைசெய்யவும், பொது இடங்களில் அலங்காரங்களுக்காகப் பொலித்தீன் உற்பத்திகளைப் பயன்படுத்துவதைத தடைசெய்யவும் அமைச்சரவை தீர்மானித்திருக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கையில் பொலித்தீன் பாவனையால் ஏற்படும் விளைவுகள் பற்றி தங்கள் கீழுள்ள நிறுவனங்களுக்கும் அறிவு புகட்டி, பொலித்தீன் பாவனையை நிறுத்தி, சூழலை பாதுகாக்க உரியநடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (113)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : நி.நிதர்ஷா
முகவரி : இல 1, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.


# தூவல் நீர்ப்பாசன அறிமுக விழா அளவெட்டியில் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

தூவல் நீர்ப்பாசன அறிமுக விழா அளவெட்டி மேற்கிலுள்ள ச.சேனாதிராசா என்பவரது தோட்டக் காணியில், தைப்பொங்கல தினததன்று நீர்ப்பாசன திட்ட அறிமுக விழா நடைபெற்றது. விவசாயிகள் சம்மேளனத் தலைவர். ந.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன், விவசாயப் போதனாசிரியர் எஸ்.மணிவண்ணன், வங்கி ஊழியர்கள், இரிடெக் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஹற்றன் நஷனல் வங்கியின் நிதியுதவியுடன் இரிடெக் நிறுவனமே இந்த தூவல் நீர்ப்பாசன திட்டத்தை குடாநாட்டிலே அறிமுகம் செய்து வைத்துள்ளது. தற்போது பதினாறு விவசாயிகள் இதன்மூலம் பயன் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரத்தில் தலைமையகத்தைக்கொண்ட இரிடெக் நிறுவனம் காங்கேசன்துறை வீதி, இணுவிலில் தனது கிளையைத் திறந்துள்ளது. விவசாயிகளின் நீர்ப்பாசனத்தை இலகுவாக்கும் பொருட்டு இது அறிமுகப்படுத்தியுள்ள தூவல் நீர்ப்பாசனத்திட்டம், தற்பொழுது குடாநாட்டின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆயிரம் கன்று நிலப்பரப்புக்கு இந்த நீர்ப்பாசனத் திட்டத்தைத் தயார்ப்படுத்துவதற்கு 20 ஆயிரம் ரூபாவிற்கு மேல் செலவாகும் எனவும், இதற்காக கடனுதவியை ஹற்றன் நஷனல் வங்கியின் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

- எஸ்.ஜெயா

# இலங்கையின் கட்சி அரசியலில் தலைமைத்துவத்தின் உளத்தாக்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

இந்த நிலையானது எதிர்காலத்தில் தென்னிலங்கையில் அரசு அமையவேண்டுமாக இருப்பின் இவர்களின் பங்களிப்பு இல்லாது செயற்படமுடியாத ஓர் சூழ்நிலையை வெகுவிரைவில் உருவாக்கிவிடும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையை எதிர்பார்த்தே, மேற்கத்தேய வல்லரசுகள் காத்திருப்பதாகத் தெரிகிறது. இனவாதக்கட்சிகள் ஆட்சி அமைக்கும் சூழ்நிலை ஒன்று தோன்றுமானால் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை தோன்றும், இத்தகைய ஓர் சூழ்நிலையினைப் பயன்படுத்தி ஐரோப்பிய வல்லரசான அமெரிக்கா இலங்கையில் கால்பதிக்கக்கூடும்.

இதனூடாக இலங்கை பற்றி அமெரிக்கா கண்டுவரும் நெடுநாள் கனவு நிறைவேறும். ஆனால், இந்த நிலையில் இலங்கையானது ஈராக் அல்லது ஆப்கானிஸ்தான் போன்ற களநிலைத் தோற்றத்தை உண்டுபண்ணிவிடும்.

இதேவேளை, இத்தகைய ஒரு செயற்பாட்டினை இலங்கையின் அண்டைநாடும் ஆசிய வல்லரசுமான இந்தியாவும் ஏற்றுக்கொள்ளமாட்டாது. இதற்கான முன்னேற்பாடாகவே இலங்கையின் கேத்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இந்தியா குத்தகை பெறும் செயற்பாட்டில் இறங்கியுள்ளதெனலாம்.

எனினும், இந்தியா - இலங்கைக்கு மீண்டும் படை அனுப்பி யுத்தத்தில் ஈடுபடுமாக இருந்தால் சோவியத்யூனியன் உடைந்தது போன்றே இந்தியாவின் 27 மாநிலங்களும் உடைந்து தனியரசுகளாக உதயம் பெறும். இதற்கான முன்னேற்பாட்டினை மேற்கொள்ள இந்தியா தயாராக இல்லை. இந்திய மக்கள் எல்லோரினதும் கனவு ஒன்றுபட்ட இந்தியாவேயாகும்.

எனவேதான், இத்தகைய இரு வல்லரசுகளும் தமக்கு ஏற்ற தலைமைத்துவத்தினூடாக, தமது காய்நகர்த்தலை மேற்கொள்கின்றன. இத்தகைய காய் நகர்த்தலே இன்றைய இலங்கையின் அரசியல் சிக்கல்பாடுகளின் தோற்றப்பாடுகளாகும்.

இதற்கு, இலங்கையின் அமைவிடம் பிரதான காரணமாகும். இலங்கையானது நாலாபக்கமும் கடலால் சூழப்பட்ட கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த வளம்நிறைந்த தீவாகக் காணப்படுவதோடு, மத்திய கோட்டுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் சீரான காலநிலை அமைவுகளையும் கொண்டுள்ளது. இதனால், மனிதவாழ்வுக்கு உலகில் மிகவும் உகந்த பிரதேசமாகக் காணப்படுகின்றது.

இத்தகைய இயல்புகளோடு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கை அமைந்துள்ளதால் உலக வல்லரசான அமெரிக்கா உலகின் பொலிஸ்காரனாக தன்னைக் காட்டிக்கொள்ளவும் இன்று உலகிலேயே தொழில்நுட்பம், விவசாயம், அணுகுண்டு என்பவற்றில் துரிதமாக முன்னேறிவரும் இந்தியாவுடன் போட்டியிடவும், ஆசிய நாடுகளை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் இலங்கை சிறந்த தளமாக காணப்பட்டமையால் அமெரிக்கத்தலையீடு இலங்கையில் அதிகரித்தது எனலாம்.

இதேபோன்றே, இந்தியாவும் தனது மேலாதிக்கத்தினை ஆசியாவில் நிலைநிறுத்தவும், தனது சொந்தப்பாதுகாப்புக் கருதியும் அண்டை நாடான இலங்கையின் அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்றது.

இவ்வாறு இரு நாடுகளின் செல்வாக்கும் இலங்கை அரசியல் நிலைபெற இந்நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளின் போக்கே காரணமாகும். இதற்காகக் கடந்தகால வெளிநாட்டுக்கொள்கையினை பின்நோக்கிப்பார்த்தல் சிறந்ததாகும்.

இங்கு வெளிநாட்டுக் கொள்கையில் பிரதானமாக ஐக்கியதேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் செல்வாக்கே முதன்மை பெறுகின்றன. ஏனெனில் இவ்விரு கட்சிகளுமே அரசமைப்பதில் பெரும்பங்காற்றின.

இந்தவகையில், சுதந்திரத்தின் பின் 1948 தொடக்கம் 1956 வரை ஆட்சியிலிருந்த ஐ.தே.கட்சியானது (டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, சேர்ஜோன் கொத்தலாவல) பொதுவாக கம்யூனிசத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதோடு, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தன.

1956 - 1965 வரையான காலப்பகுதியானது பொதுவாக, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செல்வாக்குமிக்க காலகட்டம் எனலாம். இக்காலப்பகுதியில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க 1956 - 1959 வரையும் டபிள்யூ.தஸநாயக்க, டட்லி சேனநாயக்க 1959-1960 வரையும், 1960 ஜுலைமுதல் 1965 வரையான காலப்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்கவும் ஆட்சிபீடம் ஏறினார்.

இக்காலப்பகுதியானது வெளிநாட்டுக் கொள்கையில் கம்யூனிச ஆதரவு கூடியதோடு மேற்குலகத்திற்கான தொடர்பும் குறைவடைந்தது. இந்தியாவுடனான தொடர்புகள் வலுப்படுத்தப்பட்டன. இதன் ஒரு கட்டமாகவே 1962 இல் இந்திய - சீன போரை முடிவுக்குக் கொண்டுவர மாநாடும் கூட்டப்பட்டது.

ஆனால், இக்காலப்பகுதியில் அமெரிக்க பொருளாதார உதவி நிறுத்தப்பட்டதுடன், 1963 இல் அமெரிக்காவின் 7 ஆவது கடற்படை இலங்கையின் எல்லைப்புறக்கடலுக்கு வர மறுப்பும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இதனைத் தொடர்ந்து 1965 - 1970 வரையான காலப்பகுதியில் ஐக்கிய தேசிய கட்சியானது டட்லி சேனநாயக்கவினை பிரதமராகக் கொண்டு அரசமைத்தது. இதன் காரணமாக அமெரிக்காவுடன் ஐ.தே. கட்சி அரசு இறுக்கமான தொடர்பினை மேற்கொண்டதால், 1966 இல் பெப்ரவரி முதல் அமெரிக்க உதவிகள் இலங்கைக்குக் கிடைத்தன. இத்தோடு பிரித்தானியாவுடனும் நெருக்கமான தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன.

1970 - 1977 வரையான காலப்பகுதியில் ஐக்கிய முன்னணி எனும் கூட்டு அரசானது சிறிமாவோ தலைமையில் உருவானது. இந்தக் காலப்பகுதியில் மீண்டும் மேற்குலகத்துடனான தொடர்புகள் நலிவடைய இந்திய சார்பான கொள்கைகளே வலுப்பெற்றன.

இந்தக் காலப்பகுதியில் பங்களாதேஷ் பிரச்சினையில் நடுநிலைமை வகித்து 1972 இல் பங்களாதேஷை அங்கீகரித்ததுடன் - இலங்கையிலிருந்த அமெரிக்க சார்புடைய சர்வதேச ஆக்கிரமிப்பாளர்களான இஸ்ரேலியர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இத்தோடு 1972 இல் இலங்கை குடியரசானதால் பிரித்தானிய உறவுகளிலும் விரிசல் ஏற்பட்டன.

1977 - 1994 வரையான நீண்டதொரு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சி செய்தது. 1978 - 1988 வரை ஜே.ஆர். ஜெயவர்த்தன நாட்டின் தலைவராக இருந்த போது, வெளிநாட்டுக் கொள்கையிலும் மாற்றம் கண்டன. பழைய கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்ட போதும், மேலைத்தேய உறவுகளில் கரிசனைகாட்டப்பட்டது. இதனால், பிரித்தானிய - அமெரிக்க உறவு வலுப்பெற்றது.

இதனைக் கவனத்திற்கொண்ட இந்தியாவானது- தமிழர் பிரச்சினையை சாட்டாக வைத்து தெற்காசியப் பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தினை செலுத்த முனைந்த ஜே.ஆரின் நயவஞ்சக சூழ்ச்சித் திட்டத்தினுள் அகப்பட்டு ஈழம்மீது படை அனுப்பி மண்கவ்விக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

1988 - 1993 வரை ஆட்சி செய்த ஆர். பிரேமதாஸ அரசானது, இந்திய அமைதி காக்கும் படையினை திருப்பி அனுப்பும் முகமாக மேற்கொண்ட நடவடிக்கையானது இந்திய உறவில் விரிசலை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து 1993 இல் பதவி ஏற்ற டி.பி.விஜயதுங்க ஒரு பொம்மை அரசாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1994 இல் பதவியேற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசானது சந்திரிகா தலைமையில் உதயமாகியது. இந்த அரசானது ஆரம்பத்தில் முதலாளித்துவ நாடுகளுடனும், இந்தியாவுடனும், உறவுகளைப் பலப்படுத்தி வந்தது. ஆனால், நாடாளுமன்ற தேர்தலில் ஐ.தே.கட்சியின் கூட்டுக்கட்சிகளின் வெற்றியைத் தொடர்ந்து, பொ.ஐ.மு.இந்தியாவுடன் கை கோர்த்து நிற்கின்றது.

இதேபோன்றே, ரணில் தலைமையிலான நாடாளுமன்ற அரசானது அமெரிக்காவுடன் கைகோர்த்து நிற்பதைக்காணலாம். இத்தகைய இரு போக்குகளும் இலங்கையில் வெளிநாட்டுச் சக்திகளின் பின்னணியால் ஏற்பட்ட விளைவுகளையே எடுத்துக்காட்டுகின்றன.

இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், இலங்கையானது சுதந்திரம் அடைந்த காலம் தொட்டே ஐக்கிய தேசியக் கட்சியானது மேற்கத்தேய அமெரிக்க சார்பு போக்கினையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியானாது, இந்திய சார்பு போக்கினையும் கொண்டிருந்தமை தெளிவாகின்றது.

இத்தகைய, அந்நிய சார்புப் போக்கே இன்றைய தமிழர் சமாதான முயற்சியில் ஓர் இக்கட்டான சூழ்நிலையினைத் தோற்றுவித்துள்ளது எனலாம். இந்தியா தனது நலனைப் பேண இலங்கை ஜனாதிபதியை கருவியாகக்கொண்டு செயற்பட அமெரிக்காவோ, அமைச்சர் மிலிந்தமொறகொடமூலம் - ரணில் ஊடாக காய்நகர்த்தலை மேற்கொள்கின்றதெனலாம்.

ஏனெனில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தனது சமாதான முயற்சியினை தொடர்ந்து மேற்கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் இருந்தபோதும், அவர் அதனை மேற்கொள்ள முன்வரவில்லை.

பாதுகாப்பு அமைச்சு என்பது ஜனாதிபதியிடமோ அல்லது தனியான ஒரு அமைச்சிடமோ இருக்க வேண்டும் என்ற சட்டவரையறை இல்லை. வேண்டுமானால், எந்தவொரு அமைச்சும் வைத்திருக்கலாம். ஆனால், முப்படைகளின் தளபதியாக ஜனாதிபதியே இருப்பார். *(தொடரும்)*

# தொடரும் சமூகச் சீரழிவுகள் எங்கே போய் முடியும்?

'அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை. உப்பு இல்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை' இப்படியொரு வார்த்தை தமிழில் உண்டு. இந்த வார்த்தையின் அர்த்தங்களை தற்போது தமிழ் மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

அண்மையில் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் இந்த உணர்தலின் வெளிப்பாட்டை நன்கு புலப்படுத்தியுள்ளது. அந்தச் சம்பவம் வெறுமனே ஒரு சம்பவம் என்றில்லாமல் அவ்வாறு பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பதையும் சுட்டுகின்றதாக உள்ளது. எல்லோராலும் வெளியில் சொல்லிவிட முடியாத சம்பவங்களாகவும் அவை அமைந்துள்ளன.

சம்பவம் இதுதான் - பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருவருடன் பாலியல் சேட்டை புரிய முயன்ற ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதே அதுவாகும்.

இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு வாரத்திற்குள் இன்னொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. 10 வயதுச் சிறுமி ஒருவர் மீது பாலியல் வல்லுறவு புரிந்தார் என்ற பெயரில் 16 வயதுச் சிறுவன் ஒருவன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. இந்தச் செய்திகளைப் பார்த்துவிட்டு மனவேதனை அடையவே முடிகிறது. நாடு எங்கே சென்று கொண்டிருக்கின்றது என்று தெரியாமல் 'சரியான ஒரு படகோட்டியின் கையில் எப்போது துடுப்பு போய்ச்சேரும்' என்ற கவலைகளும் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் ஒரு நாட்டில் நடைபெறுகின்றன என்று சொன்னால் அந்தச் சம்பவங்களுக்குக் காரணம் - அந்த நாட்டில் ஒரு சரியான ஆட்சி நடைபெறவில்லை என்பதேயாகும்.

இதனை 'பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத் திரங்கள்' என்று பாரதியாரும் தனது பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

எமது பண்பாடு மற்றும் கலாசாரம் குறித்து அக்கறைகொண்டு செயற்படுவோர் தற்போது இங்குள்ள நிலையிலும் இவ்வாறான சம்பவங்கள் ஏன் ஏற்படுகின்றன? அவர்கள் இல்லாத வேளையில் இருப்பது போன்ற நிலைமை தானே தற்போதும் தொடர்கின்றனவே? என்ற கேள்வி தோன்றுவது இயல்பானதே. இந்தக் கேள்வியிலும் நியாயம் இருப்பதாகவே படுகின்றது. ஆனாலும் இதற்குரிய நடவடிக்கைகள் எதனையும் - கடுமையாக கலாசாரத்தைப் பேணுகின்ற இளைஞர்களால் செய்ய முடியாத ஒரு நிலையே தற்போதுள்ளது.

தமது கலாசாரத்தை கண்ணெனப் பேணிக்காத்து வாழ்ந்துகொண்டிருந்த சமூகம் - இன்று இந்த நிலைமையை அடைந்தமைக்கு புதிய காரணங்களை விளக்க வேண்டிய தேவை இருக்காது என்றே கருதுகின்றேன். தமிழர்கள் தமது கலாசார பேணுகையை கைவிட்ட- தமிழர்களிடம் இருந்து கைவிட்டுப் போன, அந்தக் குறிப்பிட்ட சில ஆண்டுகள் மிக மோசமான ஆண்டுகளாகவே விளங்கி தம்மை அடையாளப்படுத்தி நிற்கின்றன.

குறிப்பிட்ட சில ஆண்டுகளில் நடைபெற்ற சமூக, கலாசார சீர்கேடுகள் - முன்னைய காலங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் அதிகமானதாகும். பொதுவாகவே ஒரு நாட்டில் இலட்சியத்தை நோக்கிய ஒரு பயணத்தில் கல்லும் முள்ளும் இருக்கவேசெய்யும். அந்த இலட்சியத்தை அடைய முயல்பவர்கள் கற்களிலும், முட்களிலும், காடுகளிலும் எனத் தமது பயணத்தை மேற்கொள்ளத் தயங்க மாட்டார்கள். இந்த நிலையில் அந்த இலட்சியப் பயணத்தைத் தடுக்கும் சில சக்திகள் அவற்றைக் குழப்புகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

ஒரு இலட்சியத்தை நோக்கிய பயணத்தைத் தடைசெய்யும் - தவிர்க்கும் விடயங்கள் பலவாகக் காணப்படும். அந்தத் தடை செய்யப்பட்ட, தவிர்க்கப்பட்டவற்றை இலவசமாகவும் அல்லது குறைந்த விலையிலும் கொடுக்கின்ற முயற்சிகளில் சமூக விரோத மற்றும் தேசவிரோத சக்திகள் ஈடுபடுவார்கள் என்பது உண்மை.

அது மட்டுமல்லாமல் இயல்பாகவே தடுக்கவேண்டிய பொருட்கள், பழக்கவழக்கங்கள் எதுவெனத் தெரிந்து, அதனைத் தடுத்து தம்மை அவை அணுகாமல் வாழ்ந்து கொண்டுவருகின்ற ஒரு சமூகத்தின் பழக்க வழக்கங்களில் - சில புல்லுருவிகளைச் செயற்கையாகவே உண்டுபண்ணச் செய்யும் நடவடிக்கைகள் திட்டமிட்டு செயற்படுத்துவது இயல்பான நடவடிக்கைகள் ஆகிவிட்டது.

இவ்வாறான ஒரு நடவடிக்கை தமிழர் தாயகப் பகுதியிலும் திட்டமிட்டுச் செய்யப்பட்டு வந்திருக்கின்றது. அந்த நிலைமை தொடர்வதில் ஆச்சரியமும் இல்லை. அந்த நிகழ்ச்சியின் தொடர்ச்சியாகவே ஆரம்பத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன, நடைபெற்று வருகின்றன. கந்தபுராண கலாசாரம் நிலவியதாகக் கூறப்படுகின்ற இந்த மண்ணில் - நாவலர் காலத்திலும், பண்டிதமணி கணபதிப்பிள்ளை காலத்திலும் மட்டுமல்ல, வேலுப்பிள்ளை, வேலுப்பிள்ளை யின் மகன் காலத்திலும் நிலவுகின்ற கலாசாரப் பேணுகைகள் தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களைக் கைவிட்டுப் போவதில், அதில் அக்கறைகொள்ளாமல் இருப்பதில் கவலைப்படாமல் இருக்கமுடியவில்லை.

வெறுமனே கவலைப்பட்டுக்கொண்டிருப்பதைக்காட்டிலும், நிலைமைகளை மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கமுடியாதா என்று சிந்திக்கவேண்டிய கடப்பாட்டில் நாம் தற்போது உள்ளோம். இந்தச் சிந்தனைகளைச் செயற்படுத்துபவர்களும் நமது மக்களேயாவர்.

சமூக மட்டத்தில் இயங்கும் சனசமூக நிலையங்களும், பொது அமைப்புக்களும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், சீர்கேடுகளில் ஈடுபடுபவர்களை இனங்காண்பதற்குரிய நடவடிக்கைகளையாவது செய்ய முன்வரலாம். தமது எல்லைகளுக்குட்பட்டுச் செயற்படுவதன்மூலம், சீர்கேடுகளில் ஈடுபடுபவர்களைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம். பொது அமைப்புக்களின் கைகளுக்கு மீறி இந்தச் சம்பவங்கள் நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில், இதனைக் கட்டுப்படுத்தித் தடுக்கும் ஆற்றலும், பொறுப்பும் உடையவர்களிடம் இத்தகையோரை இனங்காட்டி, உரிய நடவடிக்கைகளை எடுக்கக் கோரலாம்.

இந்த நிலையில், மீண்டும் ஒரு கேள்வி இயல்பாகவே எழுகின்றது. பொது அமைப்புக்களின் கைகளை மீறுகின்ற செயல்களை, தண்டனை வழங்கப்படவேண்டிய செயல்களை கையாள்வதற்கு அமைக்கப்பட்ட நிறுவனங்களும் உரிய தண்டணைகளை வழங்குமா என்பதே இந்தக் கேள்வியாகும்.

இந்தநிலையில், பொது அமைப்புக்களின் கண்காணிப்பு, அதனைத் தொடர்ந்து இந்தச் செயல்களில் அவர்கள் காட்டிய செயற்பாடுகள் யாவும் விழலுக்கிறைத்த நீராகிப் போவதற்குச் சாத்தியங்கள் உண்டு. அவற்றினை அழிப்பதற்கு உரிய அங்கீகாரத்தைப் பெறுவது அவசியமானது.

வலுமிக்க பொது அமைப்புக்களின் பணி இதுவாகத்தான் இருக்கும். தனிமனித ஒழுக்கங்கள் இதன்மூலம் உறுதிசெய்து கொள்ளப்படும். அந்த உறுதிப்பாடு வலுமிக்க சமுதாயத்தை உருவாக்கும். தற்போது நடைபெறுகின்ற சமூகச்சீர்கேடுகள் இல்லாத ஒரு சமூகம் உருவாக வழியேற்படும்.

**பூஞ்சிட்டு**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

திருக்குறள்

## நமது நோக்கு

### சந்திரிகா, ஜே.வி.பி கூட்டணி, யாருக்கு சாதகமாக அமையும்?

ஜே.வி.பி.க்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையேயான தேர்தல் கூட்டணிக்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணி உருவாவதற்கு எந்த விதமான தேசிய நலனும் அடிப்படையான காரணமாக இல்லை என்பதை, இதற்கான பேச்சுக்கள் தொடங்கியகாலகட்டத்திலிருந்து நேற்றுவரை நடந்துமுடிந்த அத்தனை நிகழ்வுகளும் சான்றாகும். பேரம் பேசுவதன் மூலம் பெறக்கூடிய அனுகூலங்களை மட்டும் குறியாகக் கொண்டு, தற்போதைய அரசையும், அது முன்னெடுத்துவந்த சமாதான முயற்சிகளையும், செயல்இழக்கச் செய்வதன் மூலம் தமது சொந்த அரசியல் அபிலாஷைகளை எட்டும் நோக்குடன் மட்டும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ள இக்கூட்டணி ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டணிதான் என்பதில் ஐயமில்லை.

ஆனாலும், இலங்கையின் அரசியல், இந்தக்கூட்டணியின் உருவாக்கம் எதிர்காலத்தில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தப்போகின்றது என்பதற்கான சமிக்ஞைகள் தெரியத்தொடங்கியுள்ளன.

கடந்த ஓராண்டுகாலமாகவே இந்தக்கூட்டணியை உருவாக்குவதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்ட போதிலும், இருதரப்பினரிடமும் காணப்பட்ட விசுவாசமின்மை, நம்பிக்கையீனம், ஆளையாள் பொறிக்குள் த ள்ள முயற்சிக்கும் தந்திரோபாயம் மற்றும் கொள்கை முரண்பாடுகள் போன்றவை அதனை உடனடியாகச் சாத்தியமாக்கவிடவில்லை.

ஆனால், இன்றைய அரசியல் நெருக்கடிகளும், ஏனைய தேர்தல் சூழ்நிலைகளும் இந்தக்கூட்டணி உருவாக்கத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதற்கான அழுத்தத்தை உருவாக்கிவிட்டது.

இதனை வேறு ஒருபுற அழுத்தமும், அறிவுறுத்தலும் கூட இதற்கான அவசியத்தை உருவாக்கியதெனலாம்.

இந்த அழுத்தம் அயலகத்தில் இருந்து கொடுக்கப்பட்டது என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எது எவ்வாறாயினும், இன்று இந்த கூட்டணி, கொள்கை முரண்பாடுகள் கொண்டோரின், சுயநல நோக்குடன் கூடிய கூட்டமைப்பு எப்படியோ சாத்தியமாகிவிட்டது.

இந்தக் கூட்டமைப்புக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மத்தியில் எதிர்ப்பு இருந்தபோதும், சந்திரிகா அதனைப் பொருட்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை, இந்த கூட்டணி தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே அதிக அக்கறை காட்டி விடாப்பிடியாகச் செயற்பட்டவர் சந்திரிகாவின் சகோதரரும், ஆலோசகருமான அநுரா பண்டாரநாயக்க என்பதும் குறிப்பிடத்தக்கது.

சரி - இந்தக்கூட்டணியால் இலாபம் அடையப்போவது யார் என்ற கேள்வியும் இப்போது பலமாக எழுந்தேயுள்ளது.

சுதந்திரக்கட்சியுடன், ஜே.வி.பி. கூட்டணி அமைக்க நேரிட்டமைக்கு பிரதான காரணம் தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகளும், தேர்தலுக்கான அறைகூவலும் தான்.

சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு ஜே.வி.பியின் வாக்கு வங்கி பெரிதும் உதவும் என ஜனாதிபதி நம்புகிறார் என்பது வெளிப்படை.

அதேபோல், இந்தக்கூட்டணி ஆட்சியை வென்றெடுத்தால் அதனால் அதிகபட்ச பலன்கனை அடையப்போவது ஜே.வி.பியாகவே இருக்கும். அந்த வகையில் தான் கூட்டணிக்கான அரசியல் பேரம் பேசப்பட்டு முடிவாக்கப்பட்டுள்ளது. விட்டுக்கொடுக்க விரும்பாத விட்டுக்கொடுப்பினை சுதந்திரக்கட்சியினர் மேற்கொண்டுள்ள வேளையில் பெற்றுக்கொள்ள கடினமான அரசியல் இலாபங்களை எதிர்காலத்தில் ஜே.வி.பி பெற்றுக்கொள்வதற்கும் இந்த உடன்பாடு வழிவகுத்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் மட்டுமல்ல, பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஏற்கனவே கூட்டணி அமைத்திருந்த இடது சாரிகளுக்கும், அதாவது கம்யூனிஸ்ட் மற்றும் லங்கா சமசமாஜக் கட்சிய னருக்கும் இந்த புதிய கூட்டு திருப்தி தரும் ஒன்றல்ல என்பதை ஏற்கனவே அவர்கள் வெளிப்படுத்தியுமுள்ளார்கள். எனவே தேர்தல் நெருங்கும் சமயம் இவர்களின் அதிருப்தி அதிக அளவில் ஏற்படுவது மட்டுமன்றி, முரண்பாடுகள் அதிகரித்து இந்தக்கூட்டணிக்குள் தம்மை இணைத்துக் கொள்ளாது தவிர்க்கும் வாய்ப்பும் உண்டு. அப்படி அவர்கள் இதுவரை காலமும் சுதந்திரக் கட்சியுடன் பேணிவந்த உறவை முறிக்காது விட்டால், அவர்களும் ஜே.வி.பியின் கொள்கைகளுக்குப்பின்னால் தாளம் போடுகின்றவர்களாகவே இருப்பர். அத்துடன் தம்மை பாரம்பரிய இடதுசாரிகள் என்று கூறிக்கொள்ளும் பெருமையை இழந்து கொள்கையற்றவர்களாக இனம் காணப்படுவதும் நிஜமாகிவிடும்.

ஆக, எல்லாவகையிலும் சுதந்திரக்கட்சியை பலவீனப்படுத்தவும, அதன் பழைய தோழர்களை இழக்க வைக்கவும், சமாதான முயற்சிகளை நாசப்படுத்தவும் மட்டும் இப் புதிய கூட்டணி வழிவகுக்கும் என்பது உறுதி. எனவே இக் கூட்டணி ஜே.வி.பியின் இலக்கினை எட்டவைக்கவே உதவும் என்பது மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூடாரத்தை தன்வசமாக்கும் ஜே.வி.பியின் அபிலாஷையை 'அநுரா' என்ற பொம்மையைப் பயன்படுத்தி சாத்தியமாக்கவும் உதவும் என்பது உண்மையேயாகும்.

## நாடும் நடப்பும்




# வெளிநாடுகள் மூலமான நிதியுதவிகள் உரியவர்களைச் சென்றடைய வேண்டும்

## கல்வி கலாசார நிலைய செயலர் சாந்தசிறி தேரர் தெரிவிப்பு

வெளிநாடுகள்மூலம் கிடைக்கும் நிதியுதவிகள் உரியவர்களைச சென்றடைகின்றனவா என்பது கேள்விக்குறியாகவுளளது. இந்த உதவிகள் யாரைச் சென்றடையவேண்டுமோ அவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டுமென இலங்கை - நிப்போன் கலை கலாசார நிலையப் பொதுச்செயலாளர் வண மீகதெனே சாந்தசிறி தேரர் தெரிவித்தார்.

ஜப்பான் கல்வி கலாசார நிலையமூடாகக் குடாநாட்டு மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கும நிகழ்வு - நேற்று யாழ்.மத்திய கல்லூரியில நடைபெறறது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே தேரர் இதனைத் தெரவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

இன்று இலங்கையைப் பொறுத்தவரையிலே வெளிநாட்டு உதவிகளின் தேவை அவசியமாகவுள்ளது. அநேகமான நாடுகளும உதவிசெய்யத் தயாராகவுள்ளன. ஆனால், அந்த உதவிகள் உரியவர்களுக்குச் சென்றடைவதை உறுதிப்படுத்தவேணடும். வறுமை காரணமாக ஒரு மாணவனின் கல்வி பாதிப்படைய ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. அவ்வாறு வறுமையால் பாதிககப்பட்ட மாணவர்கள் எம்மோடு தொடர்புகொள்வார்கள் எனின், அவர்களுக்கு எம்மால் உதவமுடியும்.

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்களுடைய சொல்லைக்கேட்டு நடக்கவேண்டும். குடும்பத்தை மட்டுமல்லாது - இந்தச் சமூகத்தையும், நாட்டையும் நேசிக்க பழகிக் கொள்ளவேண்டும். ஆக்குவது கடிணம் அழிப்பது இலகு. அழிந்து போயுள்ள எமது நாட்டை கட்டியெழுப்பவேண்டும்.



எமது உள்ளத்தைக் கொஞசம புனிதப்படுத்தினால, உலகம் எல்லாம் புனிதமடையும். எங்களால் முடியும என்ற தன்னம்பிக்கையுணர்வையும் மாணவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். யாழ்ப்பாணத்துக்கு 30 வருடங்களுக்கு முன்னர் வந்திருந்தேன். இதன் பிறபாடு தற்பொழுதுதான் வந்தேன். இங்கு பெரிய மாற்றங்களை என்னால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. யாழ்ப்பாணததிற்கு வருவதற்குப் பயப்படததேவையில்லை என்ற உணர்வு இங்கு வந்தபின்தான் ஏற்பட்டுள்ளது. எனனோடு வந்த ஜப்பான நாட்டவர்களுக்கும், பயவுணர்வு அடியோடு அகன்றுவிட்டது.

நாங்கள் அரசியல்வாதிகளைப்போல, வாக்குறுதிகளைத் தர விரும்பவில்லை. சந்தர்ப்பம் வரும்போதெல்லாம், எம்மாலான உதவிகளைச் செய்வோம். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது எதிர்காலத்தில் வடக்கு - கிழக்கின் அனைத்துப் பகுதிகளுக்கும் எமது உதவிகள் விஸ்தரிக்கப்படவுள்ளன எனவும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் பெருந்திரளான ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.(ச)

# ஊழியர் சேமலாப நிதி பெறுவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள்

(சுதுமலை)

ஊழியர் சேமலாப நிதியினைப் பெறுவதில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதாகப் பலர் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஊழியர் சேமலாப நிதியத்தில் சேர்ந்த தொழிலாளி ஒருவர்-தனது சேவைக்காலத்தில் ஒழுங்காகத் தனது தொழில் தருநர் மூலம் குறிப்பிட்ட நிதியத்தினை மத்திய வங்கிக்கு அனுப்பி வருகின்றனர். அவ்வாறு குறிப்பிட்ட திகதிக்குள் அனுப்பப்படாத நிதிக்கு, மத்திய வங்கியால் உடனடியாகத் தண்டப் பணமும் அறவிடப்படுகின்றது. ஆனால், தொழிலிலிருந்து இளைப பாறிய அல்லது தொழிலை முடிவுறுத்திய தொழிலாளி சில வேளைகளில், ஒரு வருடம் நிரம்பியும் இந்த ஊழியர் சேமலாப நிதியத்தினைப் பெறுவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் தோன்றுகின்றன.

இந்தப் பிரச்சினைகளில் முக்கியமாக - தொழிலாளி மேற்படி நிதிக்கு விண்ணப்பிக்கும்போது, தொழில் திணைக்களத்தால் வழங்கப்படும் படிவங்களில் பெரும்பாலான படிவங்கள் சிங்கள மொழியில் உள்ளன. அதை வாசித்து, விளங்க தொழிலாளி பலரது உதவிகளை நாடியும், சரியானமுறையில் படிவத்தைப் பூர்த்திசெய்ய முடிவதில்லை.

அத்துடன், யாழ்ப்பாணத்திலுள்ள தொழில் திணைக்கள அதிகாரி ஒருவரிடம் இது சம்பந்தமாகக் கேட்டபோது - தலைமைத் தொழில் திணைக்களத்திலிருந்து தமக்கு கிடைக்கும் படிவங்கள் பலவும் இப்படி தனிச் சிங்களத்தில் இருப்பதனால, தாமும் மிகுந்த சிரமங்களை அனுவிப்பதாகத் தெரிவித்தார்.

எனவே, இந்த மொழிமாற்றப் பிரச்சினையில் பலர் சிரமப் படவேண்டுடியுள்ளது. எனவே உரியவர்கள் அது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஊழியர்கள் நன்மையடைய உதவுவார்களா எனப்பலரும் வினாவுகின்றனர். (44)

# சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படும் குளிர்பானங்கள் நகரில் விற்பனைக்கு!

(யாழ்ப்பாணம்)

சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படும் குளிர்பானங்களால், தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. தற்போது கோடைகாலம் ஆரம்பித்து விட்டமையால் யாழ்.நகரப் பகுதியிலே பல நடைபாதைக் குளிர்பானக்கடைகள் முளைக்கத் தொடங்கியுள்ளன.

இந்தக் கடைகளில் சுகாதாரப்பிரிவினரின் அனுமதி பெறாமல் குளிர்பானங்கள் தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. யாழ்.பஸ் நிலையம், முனீஸ்வரர் வீதியில் நடைபாதை வியாபாரம் இடம்பெறும் பகுதி ஆகிய இடங்களிலேயே இவ்வாறான கடைகள்மூலம் குளிர்பானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

தடை செய்யப்பட்ட சுவையூட்டிகளையும், நிறச்சாயங்களையும் இந்த வியாபாரிகள் பயன்படுத்தி வருகின்றனர். பாதுகாப்பற்ற முறையில் குளிர்பானங்கள் தயாரிக்கப்பட்டு, கண்ணாடிப் போத்தல்களிலே அடைத்து வைக்கப்பட்டுள்ளன.

பழுதடைந்த பழவகைகளும் இந்தக் குளிர்பானங்களை தயாரிப்பதற்குப் பயன்படுத்துவதாகவும், இதனால் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் உள்ளதாகவும் சுட்டிக்காடடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக, பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அதன்மூலம உருவாகபபோகும் தொற்றுநோய் அபாயங்களைத் தவிர்க்கமுடியும் எனவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# உங்களின் புத்தாண்டு யோகம் எப்படி?



## தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால்)*

*தன்னம்பிக்கையும் தீர்க்க தரிசனமுங் கொண்ட தனுராசி நேயர்களே!*

எதனையும் எளிதில் புரிந்துகொண்டு செயற்படும் தன்மை உள்ளவர்கள். பல வழிகளிலும் சிறப்பாகச் செயற்பட்டு முன்னேறுவீர்கள். குரு பகவான் தனுராசியை நோக்குவதால் பல நன்மைகளுண்டு. பெற்றோர்கள் மூலம் சொத்துக்கள் சுகங்கள் கிடைக்கும். குருமார்களின் சேர்க்கையும் மகான்களின் தரிசனமும் உண்டாகும். தைரியத்துடனும் புதுப்பொலிவுடனும் நீங்கள் செயற்படுவீர்கள். நோய்கள், துன்பங்கள், கடன்கள் யாவும் தீர்ந்து போகும். அரசாங்க உதவிகளும் பெரிய பணக்காரரின் நன்மைகளும் கிட்டும். நீங்கள் போடும் திட்டங்கள் எல்லாம் எளிதில் செயற்படுத்தப்பட்டு நல்ல பலனைத் தரும். பொருளாதாரம் உயரும். சுற்றுலாக்கள், திருவிழாக்கள் போன்ற நல்ல காரியங்களிலும் ஈடுபாடு அதிகமாகும். பூர்வ புண்ணிய வசத்தினால் திருமணம், புத்திரப்பேறு போன்ற நற்கருமங்களும் கைகூடும். வீடு கட்டுதல், புதுமனை வாங்குதல் போன்றவனவும் கிட்டும். 28.08.2004 இல் குரு பத்தாம் வீட்டுக்கும 05.09.2004 இல் சனி 8 ஆம் வீட்டுக்கும் மாற்றம் பெறுகிறார்கள். எனவே, ஆவணி மாத்தின் மேல் உங்களுக்குப் பெரிய நன்மைகள் கிடையாது. வரவும் செலவும் சரியாக இருக்கும். நீண்ட நாட்கள் உடல் நலம் இல்லாமல் இருந்தவர்களுடைய உடல்நிலை தேர்ச்சியடையும். தொழில் முன்னேற்றத்துக்காக மனைவி மக்களைப் பிரிந்து தூர தேசம் செல்லும் வாய்ப்பும் உண்டு. பெருத்த பொருளாதார நன்மை இல்லாவிட்டாலும் மனைவி மக்கள் ஏனைய குடும்பத்தவரின் உதவிகள் கிடைக்கும். உங்களுக்கு வீண் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் தெய்வ அனுகூலத்தால் விடுதலை பெறுவீர்கள்.

### பெண்களுக்கு

முதல் 8 மாதம் வரை நீங்கள் நினைத்த நல்ல கருமங்கள் எல்லாம் எளிதில் நிறைவு பெற்று நற்பலன் தரும். கணவனின் ஆதரவும் பெரியவர்களின் நல்லாசியும் கிடைக்கும். பொருளாதார நிலையும் நன்று. ஆவணியின் மேல் சிறப்பான பலன்கள் இல்லையாயினும் எல்லோரிடத்தும் நற்பெயர் கிடைக்கும். மக்கள் நலனில் அக்கறையும் உறவினர் மீது பாசமும் உடையவராக இருப்பீர்கள்.

### வியாபாரிகள், தொழிற்துறையினருக்கு :

வருடமுற்பகுதி தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். பல நாட்களாக எதிர்பார்த்த அரசாங்க உதவிகள் கிடைக்கும். பல இலாபங்களும் உண்டு. ஆதாயம் கிடைக்கும் வழிவகைகளைக் கண்டு முன்னேறுங்கள். வருடப் பிற்பகுதியில் தொழில்மூலம் ஆதாயம் குறைந்தாலும பெரிய நட்டங்கள் ஏற்படாது.

### உத்தியோகத்தர்களுக்கு

மேலதிகாரிகளால் நன்மையும் சக ஊழியர்களின ஒத்துழைப்பும் கிடைக்கும். பெயரும் புகழும் ஓங்கும். பதவி உயர்வு, பணி மாற்றம், ஊதிய உயர்வு என்பனவும் உண்டு தனியார் துறையில் தொழில் புரிவோர் பலருக்கு வெளிநாட்டில் உத்தியோகம் பார்க்கும் வாய்ப்புக் கிட்டும்.

### அரசியல்வாதிகளுக்கு

உங்கள் புதிய தலைவரைத் தொடர்ந்து நீங்களும் தலைமைப் பதவிக்குத் தயாராகிக் கொண்டு இருக்கிறீர்கள். அது உங்களுக்கு பிற்கால நன்மைக்கு அடித்தளமாக அமையும். உங்கள் தலைவருடைய நிலைக்கேற்ப நீங்களும் தாளம்போட வேண்டியிருக்கும். மேலிடத்து ஆதரவும் பொதுமக்கள் ஆதரவும் உங்களுக்கு தொடர்ந்து கிடைக்கும்.

### மாணவர்களுக்கு

இந்த ஆண்டு உயர்ந்த குறிக்கோளுடன் உங்கள் கல்வி ஆரம்பிக்கிறது. ஆசிரியர்கள் பல வழியிலும் உதவி செய்வார்கள். வருட முற்பகுதியில் உங்கள் செயற்திறன் வெளிப்பட்டு நல்ல நிலைக்குக் கொண்டு செல்லும் வருடப்பிற்பகுதியில் பல இக்கட்டான சந்தர்ப்பங்களில் நண்பர்கள் உதவுவார்கள்.



## மகரம்

*(உத்தராடம் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1 ஆம், 2 ஆம் கால்கள்)*

*தன்னலம் கருதாது பொதுநலம் பேனும் மகர ராசி அன்பர்களே!*

பெரிய மனிதர்கள் பலர் மகர ராசிக்காரர்கள். பிறர் நலனுக்காகப் பாடுபடும் நீங்கள் விடாமுயற்சியுடையவராக இருப்பீர்கள். வருட ஆரம்பத்தில் குரு பகவான் எட்டாம் வீட்டில்' சஞ்சரிக்கிறார். இந்தக் காலத்தில் உங்களுக்குப் பலவித சோதனைகள் ஏற்படலாம். இருந்தாலும் நல்ல காரியங்களும் வீடு வாகன வசதிகளும் உண்டாகும்.

தேகாரோக்கியம் இடையிடையே பாதிக்கக் கூடும். பெரிய கருமங்களைச் சாதித்து வெற்றி கொள்ளலாம் என நினைக்காதீர்கள். கடன்காரர் தொந்தரவும், அயலார் கெடுபிடிகளும் உங்கள் நிம்மதியைக் கெடுக்கும். எல்லாவற்றிலும் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எதைத் தொட்டாலும் தடங்கல், அரச அதிகாரிகளின் கெடுபிடி முதலியவற்றால், கஷ்டமடையநேரிடும். திடீர் பயணங்களால் செலவு ஏற்படும். 28.08.2004 இன் மேல் உங்களுக்கு நிம்மதியைத் தரும் காலகட்டமாக அமையும். உங்கள் செயல்களைப் பிறர் பாராட்டுவார்கள் பொருளாதார ரீதியில் ஏதும் மாற்றங்கள் அதிகம் ஏற்படாவிட்டாலும் வழமையிலும் முன்னேற்றமுடையவர்களாகக் காணப்படுவீர்கள் தொழிற்துறை முதலியன சிறப்பாக இயங்கத் தொடங்கும். நீங்கள் போட்டிருக்கும் திட்டங்களைக் கர்ச்சிதமாகச் செயற்படுத்துங்கள். பலர் பலவழிகளில் முன்னேறுவார்கள். பிறரால் செய்ய முடியாத சில காரியங்களை நீங்கள் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். கடந்த காலங்களில் ஏற்பட்ட பல பிரச்சினைகள் தற்போது நல்ல முறையில் தீர்ந்து போகும். எல்லாக் கருமங்களிலும் நீங்கள் மௌனம் சாதித்து முன்னேறுங்கள்.

### பெண்களுக்கு

வருட முற்பகுதி உங்களுக்கு கஷ்டமான காலமாகும். உங்களில் எல்லோரும் குற்றம் காண்பார்கள். யாரையும் நம்பி ஏமாந்துவிடக் கூடாது. உறவினருடன் ஓடும் புளியம்பழமும் போல ஒட்டிக்கொள்ளாமல் இருப்பது நன்று. ஆவணியின் மேல் பல வகையான முன்னேற்றங்களும் பொருள்வரவும் உண்டாகும்.

### வியாபாரிகள், தொழிற்துறையினருக்கு :

தொழிற்துறையில் நீங்கள் பல கெடுபிடிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இதனால் மனநிலை பாதிப்படையலாம். பலவகையாலும் நட்டமடையநேரும். முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும். குரு மாற்றத்தின் மேல் தொழில் பல திருப்பத்தையடையும். வியாபாரத்தை அபிவிருத்திசெய்ய வசதி கிடைக்கும்.

### உத்தியோகத்தர்களுக்கு

மேலதிகாரிகளை எந்தவழியிலும் திருப்திப்படுத்தமுடியாத சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கும். வீட்டிலும் அலுவலகத்திலும் நிம்மதி கிடையாது. வருடப் பிற்பகுதியில் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். அலுவலகத்தில் மதிப்புயரும். உங்களைப் பற்றிய ஒரு நல்ல எண்ணம் ஏற்படும்.

### அரசியல்வாதிகளுக்கு

உங்களின் அராஜகப்போக்கு வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும். பிரபல்யம் அடைவதற்கு பல தகாத செயல்களைச் செய்யவேண்டியிருக்கும். இதனால் எதிர்ப்புக்கள் அதிகரிக்கும். நேர்மையான போக்கு எப்போதும் கைகொடுக்கும். பிற்பகுதியில் எல்லோரும் உங்களுக்கு ஆதரவு கொடுப்பர். வெற்றிவாகை சூடுவீர்கள்.

### மாணவர்களுக்கு

கல்வியில் ஆர்வம் காட்டாமல் ஏனையவற்றில் ஈடுபடுவதால் பரீட்சையில் கோட்டைவிட வேண்டிவரும். ஆடம்பரங்களைத் தவிர்த்து நடவுங்கள். ஆசிரியர்கள் சக மாணவர்களுடன் அன்பாகப் பழகினால் பல நன்மையுண்டு. வருட இறுதி சிறப்பாக அமையும்.

## பார்வைகள்... பதிவுகள்... பகிர்வுகள்...



அவுஸ்திரேலிய ஈழத்தமிழர்களை ஏமாற்றிய உலக நாயகர் விவகாரம் என்ன என்கிறீர்களா?

தமிழ் திரையுலகில் உலக நாயகன் கமலஹாசன் - ஈழத் தமிழர்களைக் கொச்சைப்படுத்தி, தமிழகப் பார்ப்பனியத் தமிழர்களை மேம்படுத்தி - ஒரு திரைப்படத்தை எடுத்திருந்ததை அனைவரும் அறிவீர்கள். அது நளதமயந்தி படத்தில். ஈழத் தமிழர்கள் அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து வாழ்கின்றபோதிலும், அவர்கள் கறுப்பர்கள், அழகற்றவர்கள். கதாநாயகி என்பதால் அவர் மட்டும் ஈழத்தமிழராக இருந்தாலும் வெள்ளை அழகி. அவரின் அம்மம்மா கறுப்பு. விமானநிலைய ஈழத் தமிழ் பெண் அதிகாரி கறுப்பு, கதாநாயகி அழகி - ஆனாலும், தன் காதலனின் ஏற்பாட்டில் தமிழகப் பார்ப்பன கதாநாயகனின் மனைவியாக நடித்திருக்கிறார். அந்த வகையிலும் ஈழப்பெண் கொச்சைப் படுத்தப்படுகிறாள். இதேபோல் முழுமையாக ஈழத் தமிழர் கொச்சைப்படுத்தப் பட்டது நள தமயந்தியில்தான். இந்த விவகாரம் மட்டுமல்ல, சிறியதொரு வியாபாரமும் கமலஹாசனால் அங்கு நடத்தப்பட்டுள்ளது. அண்மையில் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த கணினி நிபுணர் ஒருவரைத் தாயகத்தில் சந்தித்தேன். 'நள தமயந்தி' படத்தில் ஈழத் தமிழர்கள் கொச்சைப்படுத்தப்பட்டார்களே, அதை அவுஸ்திரேலிய புலம்பெயர் தமிழர்கள் கண்டிக்கவில்லையா? என அவரிடம் கேட்டேன் அப்போது உலக நாயகன் - அவுஸ்திரேலிய ஈழத் தமிழர்களை ஏமாற்றிய மற்றொரு வியாபாரம் பற்றிக் கூறினார்.

அவுஸ்திரேலியாவில் தன் படத்தின் படப்பிடிப்புக் குழுவினரின் செலவைக் குறைப்பதற்காகத் தங்குமிடச் செலவுகளை ஈழத்தமிழர்களின் தலையில் பொறிக்க ஒரு வழியை அவர் கையாண்டார். படத்தில் ஈழத் தமிழர்களை நடிக்க வைத்துள்ளார். அதனை வைத்து அவர்களின் செலவில் அவர் குதிரையோட்டினார்.

படம் வெளிவந்தபோது, அந்த ஈழத் தமிழர்களின் முகங்கள் திரையில் வரவில்லை. அதன் பின்னர் அவர்கள் உலக நாயகனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். திரைப்படத்தில் நடிக்க நல்ல அழகான முகம் வேண்டும் என்ற வகையில் அவர் பதிலளித்தார் என அந்த நண்பர் கூறினார்.

ஈழத் தமிழரைக் கொச்சைப்படுத்தியது போதாதென்று, அவர்களின தலையில உலகநாயகன் குதிரையும் ஓட்டியுள்ளார்.

உலகநாயகனை மட்டுமல்ல தமிழகத் திரையுலகமே - புலம்பெயர் ஈழத் தமிழர்களின் உழைப்பினை, அவர்களின் வியர்வையை, குருதியைப் பல்வேறு வழிகளிலும் சுரண்டி வருகின்றது.

'சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இரங்காரம்' என்ற பாரதியின் கவி வரிகளின் உணர்வை அவரின் நாட்டவர்கள் - ஈழத் தமிழ் மக்கள் விடயத்தில் சிறிதளவும் கருத்தில் எடுக்கவில்லை. அதைவிட மோசமாக அவர்களைச் சுரண்டுவதுதான் கவலை தரும் விடயம். ஏற்கனவே பைலட் பிறேம் நாத்தில் - யாழ்ப்பாணத் தமிழ் நகைச் சுவையாகப் பயண்படுத்தப்பட்டு கொச்சைப்படுத்தப்பட்டது. புன்னகை மன்னனில் தமிழீழ விடுதலைப் போராளிகள் கொச்சைப்படுத்தப் பட்டனர். தொடர்ந்த 1990 களின் பின் தெனாலி, கன்னத்தில் முத்தமிட்டால், கும்மாளம், நளதமயந்தி ஆகிய படங்களில் ஈழத் தமிழரும், அவர் தம் விடுதலைப் போராட்டமும் முழுமையாகக் கொச்சைப்படுத்தப்பட்டிருக்கின்றது. 'நந்தா' படத்தில் ஈழத் தமிழர் விவகாரம் ஊறுகாயாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்த ஈழத் தமிழரின் நம்பிக்கையான சந்தையில் அவர்களையே கொச்சைப்படுத்தி, அவர்கள் மூலமே தம்மை வளர்த்துக்கொள்ளுகின்ற தந்திரோபாயத்தில் தமிழக வணிகர்கள் வெற்றிகண்டுள்ளனர்.

- திரு.த.திரு

## மக்கள் கருத்து

# எப்போது தீரும் இந்த சோகம்

யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை நோக்கிச் செல்லும் வாகனங்களும் முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் வாகனங்களும் முகம் பார்த்துநிற்கும் இடம் தென்மராட்சியின் முக்கிய நகரங்களில் ஒன்றான கொடிகாமமாகும்.

சன நெருக்கடிக்குள்ளும் வாகன நெரிசலுக்கும் இடையே தினம் சிக்கித் திணறி வருகின்றோம். இதற்குக் காரணம் கொடிகாமம் பேரூந்து நிலையம் ஆகும். 'ஏ 9' நெடுஞ்சாலைக்கு மிக அருகில் இருப்பதால் முகமாலை நோக்கிச் செல்லும் பயணிகள் வாகனமும் முகமாலையில் இருந்து வரும் பயணிகள் வாகனங்களும் கனரக வாகனங்களுமாய் வீதிகளில் வழிவிட இடமின்றி நகரத்தின் மையப்பகுதி அபாயம் நிறைந்த பகுதியாக மாறிவருகிறது.

பிரதான நான்குசந்தி மையப்பகுதியாக விளங்கி வருவதால் எந்த நேரமும் மக்களும் வாகனங்களும் எனப் பரபரப்பு நிறைந்த இடமாக காணக்கூடியதாக இருக்கின்றது.

நகரத்தின் மத்திய பகுதியில் பெரிய வணிக நிலையங்கள், சந்தை என நகரத்தை அலங்கரித்தாலும் இடநெருக்கடி காரணமாக நாளாந்தம் சிக்கித் திணறுகின்றார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லும் முக்கிய இடமாக விளங்குவதாலும் பிரதான வீதியில் பேரூந்து நிலையம் இருப்பதாலும் அசௌகரியம் ஏற்பட்டுவருகிறது.

தனியார் பயணிகள் வாகனங்கள் ஒழுங்கற்ற முறையில் வீதியில் குறுக்கும் நெடுக்குமாக நிறுத்தி ஆட்களை ஏற்ற முயற்சிப்பதால் சச்சரவுகளுக்கு இங்கு பஞ்சமில்லை. கனரக வாகனங்கள் வேகமெடுத்துச் செல்வதால் விபத்து ஏற்படும் அபாயம் உண்டு. புழுதி கிளப்பி வரும் வாகனத் தூசிகளால் மக்கள் பெரும் சிரமப்படுவதை இங்கு அவதானிக்க முடிகிறது.

நகரத்தின் மையப்பகுதியில் நெருக்கடி மிக்க நான்கு வீதிகளின் ஓரங்களில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், மூன்று சக்கர வாகனங்கள் என சூழ்ந்திருப்பதால் பாதசாரிகள், வீதியின் ஓரங்களில் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல்வேறு தேவைகளுக்காக நகரத்துக்குவரும் மக்கள், குறிப்பாகப் பெண்கள் இயற்கை உபாதைகளுக்காகச் செல்லவேண்டும் என்றால் பேரூந்து நிலையத்திற்கருகில் கழிவறைகள் இல்லாததால் கடும் சிரமத்திற்கும் மன உழைச்சலுக்கும் ஆளாக நேரிடுகின்றது.

பேரூந்து நிலையம் புனரமைக்கப்படாமையால், மழைவந்தால் ஒழுகும் நிலையும் இங்கு காணப்படுகின்றது. நகரத்தின் நான்கு சந்திகளை கோடிட்டுக் காட்டும் அறிவிப்புப் பலகை சுவரொட்டிகள் ஒட்டி மறைக்கப்பட்ட நிலையில் இருப்பதால் நகரத்திற்கு புதிதாய் வரக்கூடிய பயணிகளுக்கும், வாகன ஓட்டுநர்களுக்கும் பெரும் சிரமத்தை தருவதாகவுள்ளது.

எனவே பேரூந்து நிலையத்தினை நகரத்தின் பிரதான வீதியை விட்டு உள்நோக்கி நகர்த்துவதே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும். ☆

- அன்சலின்

### தனியார் நிறுவன ஊழியர்களது

# நட்டஈட்டுக் கொடுப்பனவுக்காக கொழும்பில் உண்ணாவிரதம்

தனியார்துறையின் புதிய திருத்தங்களுக்கு அமைய அறிமுகப்படுத்தப்பட்ட நட்டஈட்டு கொடுப்பனவு முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று கொழும்பில் நடைபெற்றது.

நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறுகோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து தனியார் நிறுவன ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

நட்டஈட்டுக் கொடுப்பனவு முறைக்கு தேசிய தொழிலாளர் சங்கத்தின் ஆலோசனைகள் எவையும் பெறப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பல்வேறு நட்டஈட்டுக்கொடுப்பனவுக்கெதிராக நடவடிக்கைகள் எடுத்தோம். அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தவில்லை. இதன் காரணத்தினால் தொடர்ச்சியான உண்ணாவிரத்தில் குதித்துள்ளோம். எமது போராட்டத்துக்கு தகுந்த பதில் கிடைக்கும் வரை இந்தப்போராட்டம் தொடரும் என தனியார் ஊழியர் சங்கம் தெரிவித்தது.

இந்த விடயம் குறித்து தொழில் அமைச்சரிடம் கேட்டபோது, முதன்முறையாக ஏனைய நாடுகளைப்போன்று இவ்வருட ஆரம்பத்திலிருந்து நட்டஈட்டு கொடுப்பனவு முறையை வழங்கியுள்ளோம். இந்தக்கொடுப்பனவு முறையினால் தொழிலாளர் நலன்கள் பேணப்படுகின்றன. நாம் இந்தத் திட்டத்தை சிறப்பான முறையில் ஆராய்ந்து சிந்தித்து நடைமுறைப்படுத்தினோம் என அவர் தெரிவித்தார்.

(01)

# லெபனான் எல்லைப்பகுதியில் ஹிஸ்புல்லா றொக்கட் தாக்குதல்



இஸ்ரேல் படையினரின் கவசவாகனமொன்று - லெபனானின் எல்லைப்பகுதியில் ஹிஸ்புல்லா குழுவினரின் றொக்கட் தாக்குதலால் அழிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில், இஸ்ரேல் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மற்றொரு வீரர் காயமடைந்துள்ளார்.

லெபனானின் எல்லைப்பிரதேசத்துக்குள் நுழையமுற்பட்டவேளையில், வாகனம் தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாக ஹிஸ்புல்லா குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால், தமது எல்லைப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் தாம் ஈடுபட்டிருந்தவேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இஸ்ரேல் படையினர் அறிவித்துள்ளனர்.

இதனிடையே கடந்த திங்கட்கிழமை லெபனானின் வான்பரப்பில் அத்துமீறி நுழைந்த இஸ்ரேல் போர்விமானங்கள், லெபனானின் தென், வடகிழக்குப் பகுதிகளில் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன.

லெபனான் வான்பரப்பில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் அத்துமீறல்களையும், ஹிஸ்புல்லா குழுவினரின் செயற்பாடுகளையும் ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கெயிட்டி நகரில் அரசுக்கு எதிராக ஆசிரியர், மாணவர் ஆர்ப்பாட்டம்!

கெயிட்ரியின் தலைநகர் போட் - ஊ- பிரின்சில் கடந்த திங்கட்கிழமை மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட முறுகல்நிலை துப்பாக்கிப் பிரயோகத்தில் முடிவடைந்துள்ளது. அரசுக்கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு மாணவர்களினால் திட்டமிடப்பட்ட பாதையை மாற்றிக்கொள்ளுமாறு பொலிஸார் கேட்டிருந்தபோது, ஆர்ப்பாட்டக்காரர்கள் மறுப்புத் தெரிவித்ததை அடுத்தே முறுகல்நிலை தோன்றியது.

ஊர்வலம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பாதையில், ஜனாதிபதியின் ஆதரவாளர்களின் பிரதேசங்கள் அமைந்துள்ளமை மற்றும் ஊர்வலம் நடத்துவதற்கு 48 மணிநேரத்துக்கு முன்னதாக அறிவிக்கத் தவறியமை போன்ற காரணங்களால், பொலிஸ் ஆணையாளர் டானியல், கொம்பரி ஊர்வலம் செல்வதற்கு தடைவிதித்ததையடுத்தே நிலைமை மேலும் மோசமடைந்தது.

பல்கலைக்கழகத்தின்முன் திரண்ட மாணவர்களும், ஆசிரியர்களும் பொலிஸாரை நோக்கிக் கற்களைவீசி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே கெயிட்டியின் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகாமல் பொதுத்தேர்தல் ஒன்றை 6 மாதங்களுக்குள் நடத்தப்போவதாக தெரிவித்த கருத்தில் ஏற்பட்ட முரண்பாடே ஆர்ப்பாட்டத்திற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாக அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் மற்றும் பொலிஸாருடன் மேற்கொண்டுவரும் ஆர்ப்பாட்டங்களின்போது 40 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## உலக நோக்கு

## நோர்வே பியோட் கடலில் சரக்குக்கப்பல் நீரில் மூழ்கியது

நோர்வேயின் 'பியோட்' கடல் பிரதேசத்தில் - கடந்த திங்கட்கிழமை நீரில் மூழ்கிய சரக்குக் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட 12 பேரில், இருவர் மரணமடைந்துள்ளனர். அத்துடன் 16 பேர்வரை காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் மூழ்கிய இடத்தில் தேடுதல் பணிகளை மேற்கொண்டிருந்தவேளையில், மூழ்கிய கப்பலின் அடிப்பாகத்திலிருந்து கேட்ட மனிதக் குரல்களையடுத்தே, மீட்புப் பணியாளர்கள் கப்பலை நீர் குறைந்த பகுதிக்கு இழுத்து வந்த பின்னர், துவாரமிட்டுத் தேடியபோது சிலரைக் காப்பாற்ற முடிந்ததாகவும். தெரிவிக்கப்பட்டுள்ளது.

550 அடி நீளம்கொண்ட இந்தக் கப்பல் கரைப்பகுதியை அண்மித்தபோது விபத்து நடைபெற்றதனால், பலர் தமது வீடுகளில் இருந்த வண்ணம் கப்பல் மூழ்கியதை அவதானித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கப்பல் மூழ்கும்போது பலர், மிகுந்த குளிரான நீருக்குள் பாய்ந்து உயிர் தப்பிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இரத்த நதியில் பயணம் செய்யும் பெண் தற்கொலைப் போராளி!

சுவிடனின் தலைநகர் ஸ்ரொகோம் தொல்பொருள் காட்சியகத்தில் 'டொரொன் பெயிலர்' என்பவரால் நடத்தப்பட்ட புகைப் படக்கண்காட்சியில், தற்கொலைப் பெண் போராளியான 'கனடியரடாட்' சிவப்பு இரத்தத்தில் மீது படகொன்றில் பயணம்செய்வது போன்ற புகைப்படம் ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இக்கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு அங்கு வருகைதந்திருந்த சுவிடனுக்கான இஸ்ரேலின் தூதுவர், அப்புகைப் படத்திற்கு வழங்கப்பட்டிருந்த மின்விளக்குகளின் வயர்களைத் துண்டித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தூதுவரின் மட்டமான செயலால் மத்திய கிழக்கின் பிரச்சினை மேலும் பாதிப்புக்கு உட்படலாமென இக்காட்சியைப் படம் பிடித்த "பொயிலர்" தெரிவித்துள்ளார். இவரும் ஒரு இஸ்ரேலியர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனிடையே இத்தூதுவரின் செயலை இஸ்ரேலியப் பிரதமர் ஷரோன் பாராட்டியுள்ளார்.

தூதுவர் தனது நடவடிக்கைக்கான காரணத்தைத் தெரிவிக்குமாறு, சுவிடன் அரசாங்கம் அவரைக் கேட்டுள்ளது. சிதைக்கப்பட்ட புகைப்படத்தில் உள்ள "யரடாட்" - 29 வயதுடைய சட்டம் பயின்றுகொண்டிருந்த பலஸ்தீனப் பெண்ணாகும். கடந்த செப்ரெம்பர் மாதம் "கைபா" நகரில் விடுதியொன்றில் நடத்திய தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 19 இஸ்ரேலியர்களை கொலைசெய்திருந்தார். "யரடாட்"டும் உயிரிழந்தார்.

## ஈராக்கில் நேரடித் தேர்தல் நடத்த ஆராயும் குழுஒன்றை அனுப்ப முயற்சி





ஜூன் மாதம் ஈராக்கியர்களிடம் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர், நேரடியான தேர்தல் ஒன்றிற்கான சாத்தியங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு குழு ஒன்றை அனுப்புவதற்கு ஐ.நா.சபை ஆலோசித்து வருகின்றது.

ஈராக்கின் இடைக்கால அரசாட்சியில் உள்ள தலைவர்களுடன் கலந்தாலோசித்த பின், இம்முடிவை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் தீர்மானிக்கவுள்ளார்.

கோபி அனான், ஈராக்கின் நிர்வாக அதிகாரியான போல் பிறைமரினதும் ஈராக்கின் ஆளும் சபையினதும் கருத்துக்களுக்கிணங்க இக்குழுவை அனுப்புவதற்கு திட்டமிட்டுள்ளார்.

இதற்கிடையே திங்கட்கிழமை ஆயிரத்திற்கதிகமான சியா முஸ்லிம்கள் அமெரிக்க அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களினால் உருவாக்கப்படவுள்ள அரசாட்சிக்கு தமது எதிர்ப்பினை ஆர்ப்பாட்டங்களூடாக தெரிவித்துள்ளார்கள்.

மேலும சியா முஸ்லிம்கள் பல தசாப்தங்களாக முன்னர் ஈராக்கிய தலைவர் சதாம் ஹூசைனின் ஆட்சியின்கீழ் பல துன்பங்களை அனுபவித்துவந்துள்ளனர். அமெரிக்க அரசினால தாம் ஓரம்கட்டப்பட்டுவிடலாமென அச்சமடைவதாக பி.பி.ஸியின் கறொலின் கங்லேய் தெரிவித்துள்ளார்.



ஆப்கான் தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் - தலிபான் போராளிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினரைப் படத்தில் காணலாம்.

## ஊர்சுற்றி எழுதுவது

பொதுத்தேர்தல் மேகம் கறுத்து, உருண்டு, திரண்டு பொழியும் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. பல நாட்களாக அதையும், இதையும் தேடித திரிந்து முறுகல், மோதல்கள் என்று வார்த்தைப்போர் நடத்தி, கூடுகட்டுவதற்கு இப்போது தயாராகிவிட்டது. கூடு கட்டியாச்சு என்றுகூடச் சொல்லலாம்!

மூன்று அமைச்சுக்களை அம்மையார் அதிரடியாகப் பொறுப்பேற்றதும், பாதுகாப்பு அமைச்சுத்தான் முக்கியமாகப் பேசப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சு இல்லாமல் சமாதானப் பேச்வார்த்தையைத் தொடர முடியாது என்று பிரதமரும், அரசாங்கமும் இன்றுங்கூட வலியுறுத்திவருகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சு மிகமுக்கியமானதுதான். ஆனால், இதைவிட அம்மையாருக்கு முக்கியமானது ஊடகத்துறை அமைச்சு என்றே சொல்லவேண்டும்.

பொய் சொல்வதற்கும், புளுகுவதற்கும் ஊடகத்துறை மிகமுக்கியம். நேற்றுவரை ரணில் அரசையும், பிரதமரையும் புளுகிவந்தவர்கள் - ஒரே நாளில் எதிர்மாறாக எழுதுவதற்கும், பேசுவதற்கும் எப்படித்தான் கற்றுக்கொள்கிறார்களோ?

முன்னர் அம்மாவின் ஆதரவைப் பெற்ற தமிழர் ஒருவர் - இந்து கலாசார அமைச்சராகவும், வேறு பல அமைச்சுக்களுக்கும் பொறுப்பாக இருந்தார். அந்தச் சமயத்தில் அவரைப்பிடித்துச் சுகங்கண்டவர்கள் சிலர், தேர்தலின் பின் அமைச்சுக்கள் பறிபோனபின் அவரைக்கைவிட்டனர். சிலர் அவரோடு வேறு தொழில்களில் சிறிதுகாலம் தொடர்ந்து தொடர்புவைத்திருந்தனர். இவர்களை அவர் மெதுவாகக் கைவிடவும் இந்துகலாசார அமைச்சர் மகேசனார் பின்னால் திரியத் தொடங்கினர்.

என்றாலும், அம்மாவிற்குச் சில தகவல்களைக் கொடுத்து அவரின் கடைக்கண் பார்வையையும் பெற்றுக்கொண்டிருந்தனர்.

ஊடகத்துறையை அம்மா பொறுப்பேற்றதும் அவர்கள் பேனையும், வாயையும் சுலபமாக வளைத்துப் பயனபடுத்திக்கொண்டனர்.

இனித் தேர்தல் காலம் வந்தால் இவர்கள் காட்டில் நல்ல மழை பொழியும்

நாடாளுமன்றத்துக்குப் பொதுத் தேர்தல் வந்தால் - தென்பகுதியில் மக்கள் முன்னணி என்ற ஜே. வி. பிக்கும் தமிழர் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஆதரவைப்பெற்ற அமைப்புக்குமே பெருவெற்றி கிடைக்கும் என்று சிஹல உறுமய ஆரூடம் கூறியிருக்கிறது.

இது ஏற்கனவே வகுப்புவாத விஷம் கக்குவதில் யாருக்கும் சளைத்ததல்ல. இதுவே ஜே. வி. பிக்கும் சான்றிதழ் கொடுப்பதாக இருந்தால் தேர்தல் பிரசாரம் இனவாதமாகவே இருக்குமென்பதைச் சொல்லத்தேவையில்லை.

அவர்கள் ஆட்சி அதிகாரத்துக்காக இனபேதத்தையும், மதத்துவேஷத்தையும் கூடக் கையிலெடுப்பார்கள்.

அடுத்து அமைச்சுப் பதவிகளைக் குறிவைத்து ஆட்சியை அமைப்பவர்களும், அழிப்பவர்களும் நாங்களே என்று முஸ்லிம் தரப்பில் குரல் கொடுக்கப்படும்.

தனித்தரப்பு, தனியலகும் இனி மேடைகளில் அதிகமாக முழங்கலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கூட்டணித் தலைமைக்குள் போட்டி என்ற பேச்சுக்கு முடிவுகட்டிவிட்டு- "இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்போம்" என்ற வட்டுக்கோட்டைத் தீர்மானமே மேலோங்கவேண்டும் அதற்காகவே குரல்கொடுக்கவேண்டும் என்றார் நண்பர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டாலும் நடைமுறைப்படுத்துவது கடினம்!

## சுதந்திரக் கட்சியின் செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கூட்டணி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோதிலும், அதனை நடைமுறைப்படுத்துவது அவ்வளவு சுலபமானதாக இருக்கப்போவதில்லை என்று- சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

பத்து மாதங்களுக்கு மேல் இருதரப்பினரும் பேச் சுவார்த்தை நடத்தி காணப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை எதிர் காலத்தில் செயற்படுத்தவும் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.




'என்ன மணியத்தாரையும் கனகண்ணையையும் நேற்றைக்கு காணேல்லை... காலமை தேத்தண்ணி குடிக்கக் கூட சந்திப்பக்கம் காணேல்லையே...!

'இந்தக் குளிரிலை எங்கை வெளிக்கிடுறது... இந்தமுறை கடுங்குளிர் தான்... அதான் வரேல்லை... ஆனால் மணியத்திற்கு என்ன நடந்ததோ தெரியவில்லை... மழையோ, புயலோ சந்திப்பக்கம் வந்து தலைகாட்டாட்டி அவனுக்கு தலை வெடித்துவிடுமே...!'

'அந்தா அங்கை வருகுது மணியம்... கனகண்ணை ஆள் காலமையே தவறணைக்குப் போட்டுத்தான் வருகுதுபோல... தள்ளாடுது...'

'என்னமணியம் தள்ளாடுகிறாய் விடியப்பறமே கலை ஏறிட்டுதோ...?'

'உனக்கு விசர் நான் குளிரிலை தள்ளாடுறன்... அது சரி சந்திரிகாவின் ஆட்சியும் ஜே.வி.பியும் கூட்டணி சேர்ந்திட்டுதாமெல்லே...!'

'அதுக்கென்ன இப்போ... நீண்டநாள்பேச்சு இப்போதான் முடிவுக்கு வந்திட்டுது... ஆனால் கூட்டணி உடன்பாடு கையொப்பமிடும் வைபவத்திற்கு சந்திரிகா பேகேலையாமே!'

'மனட்சாட்சி குத்தியிருக்கும்... தனது கணவரைக் கொன்ற கட்சியோட கூட்டணி சேரவேண்டிய பரிதாபநிலை அவருக்கு... எப்படி அந்த வைபவத்திற்கு அவரால் போகமுடியுமாம்...'

'அப்ப அவவுக்கு மனச்சாட்சி இன்னும் இருக்கு என்று சொல்லுறாய் அப்படித்தானே... நீ என்ன சொன்னாலும் இது விஜயகுமாரணதுங்கவுக்கு அவர் செய்த துரோகம் என்றே எனக்குப்படுகிறது...'

'அரசியலிலை துரோகத்தனங்களுக்கு ஜனநாயக தர்மம் என்று ஒரு அர்த்தம் இருப்பதாக, ஓர் அறிஞர் சொல்லியிருக்கிறார் தெரியுமே...'

'அதென்னமோ சிறிலங்காவிலை ஜனநாயகம் என்ற சொல்லைகேட்டாலே இந்தக் குளிரைவிட மோசமாக நடுங்குதப்பா...'

தெருவிராசி

## மட்டக்களப்பில் இன்று பொங்கு தமிழ் நிகழ்வு!

(கொழும்பு)

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு இன்று மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது. வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் பேரணி இன்று காலை ஏழு மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றது. கல்முனை, அக்கரைப்பற்று, களுவாஞ்சிக்குடி, வாகரை, பட்டிருப்பு, சித்தாண்டி ஆகிய பகுதிகளிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், சந்திரநேரு உட்பட முக்கிய பிரமுகர்கள் தலைமையில் மக்கள் பேரணிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிமைசிங்க மற்றும் வெளிநாட்டு இராஜ தந்திரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று மட்டக்களப்பில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வையொட்டிய சிறப்புநிகழ்ச்சி புலிகளின் குரல் வானொலியில் இன்று காலை 9 மணிமுதல் மாலைவரை நடை பெறவுள்ளது.

## எந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தாலும் யானை சின்னத்தை இழக்கமாட்டோம்!

## அமைச்சர் லொக்குபண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டுச் சேர்ந்தாலும் ஒருபோதும் தனது யானைச் சின்னத்தை மாற்றியமைக்க இணங்கமாட்டாது என்று நீதியமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்த தாவது -

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் யுகத்துக்கு யுகம் மாறியுள்ள போதிலும், கட்சியின் சின்னம் மாறவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேறு கட்சிகளுடன் கூட்டடிணைந்தபோது தமது கைச்சின்னத்தை மாற்றி சக்கரம், கதிரை போன்ற சின்னங்களை அறிமுகப்படுத்தியது.

ஆனால், இலங்கையில் எத்தகைய கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டாலும், எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றிபெறும் என்று தெரிவித்தார்.

### முரண்பாடான...

தோற்றுவித்துள்ளதுடன், நாடு தழுவிய ரீதியில் பாரிய கேள்வியையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே - இன்று நடைபெற்ற இரு கட்சிகளுக்குமிடையிலான கூட்டணியால் பயனேதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இது இரு கட்சிகளுக்குமிடையில் விவாகரத்து நிலைபோன்றே உள்ளது எனவும் தெரிவித்தார்.

### வட-கிழக்கு...

பொத்துவில் பிரதேசசபை ஆகியவற்றுக்கான தேர்தல்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜே.வி.பி...

வுள்ள பொதுக்கூட்டத்தில் சோமவன்ச அமரசிங்கவும், ஜனாதிபதி சந்திரிகாவும் சிறப்புரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அதிகாரப்...

தமிழ்மக்கள் எந்தவிதமான விமோசனத்தையும் பெறப்போவதில்லை.

சிங்களப் பிரதேசங்களில் 55 வீதமான தமிழ்மக்கள் வாழ்கின்றனர். வடக்கு - கிழக்கில் 12 வீதமான தமிழ்மக்களே வாழ்கின்றனர்.

இதன்படி தமிழ்மக்களுக்கு நாட்டில் மூன்றில் ஒருபகுதியையும் கடற்பிரதேசத்தில் மூன்றில் இரண்டு பகுதியையும் வழங்குவதற்கு தயாரில்லை என்பதுதான் தமது கருத்து என்றும் சோமவன்ச அமரசிங்க மேலும் குறிப்பிட்டார்.

## சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டணி...

நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டார நாயக்க, முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் உட்பட பெருமளவான அரசியற் பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இருந்தபோதும் ஜனாதிபதி சந்திரிகாவோ, ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவோ கலந்துகொள்ளவில்லை.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பினனா் இந்தக் கூட்டணியின் பாடல் இசைக்கப்பட்டது. இப்பாடலுக்கு குமாரதாஸ் சப்புநந்தா இசையமைத்திருந்தார்.

ஒப்பந்தப் பத்திரங்களில் இரு தரப்பும் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள விடயங்கள் சிங்களத்தில் வாசிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த ஒப்பந்தத்தின் வரலாறுமாறும் அரசியல் பின்னணி குறித்து மைத்திரிபால சிறிசேன உரையாற்றினார்.

தொடர்ந்து ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உரையாற்றுகையில், நாட்டைத் துண்டாடுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளைத் தடுப்பதற்கு ஜே.வி.பி. இந்தக் கூட்டணியை அமைத்தது. சமாதான முயற்சிகள், அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை என்பன இலங்கையைப் பிரிப்பதற்கான மேற்குலக சதியின் ஒரு பகுதியாகும்.

2500 ஆண்டுகால பழமை வாய்ந்த இலங்கையின் நாகரிகத்தை பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கவின் அரசாங்கம் குறைத்துவிட்டது. இந்தக் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் அந்நிய நாசகார சக்திகளின் தலையீடுகளைத் தடுப்பதன்மூலம் நாட்டின் வளங்களை சுரண்டும், வெளிநாடுகளிடமிருந்து பாதுகாப்பு ஏற்படுத்தப்படும்.

இது நெருக்கடியான காலகட்டம். கொள்கையளவிலான மாற்றங்களுடன் இரண்டு கட் சிகளும் ஒரே குறிக்கோளுடன் பயணம் செய்வது சிரமமான விடயமாகும்.

எனினும் நாம் இந்த நெருக்கடிகளை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் காரணமாக புறந்தள்ளி நாட்டையும், மக்களையும் அழிவிலிருந்து மீட்பதை எமது மிகப்பெரிய கடமை என நினைத்து இணைந்துள்ளோம். இதன் மூலம் எதிர்த்தரப்பினரின் எதிர்பார்ப்புகள் தகர்ந்து போயுள்ளன.

அத்துடன் நாடு சீரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. பிரிவினைக் கொள்கை முன்னெடுக்கப்படுகிறது. இதற்கு மத்தியில் நாட்டின் நலனைக் கருதியும் முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட இரண்டு கட்சிகளும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

நாட்டை கட்டியெழுப்பக்கூடிய செயற்பாடு மிகவும் ஆவல் நிறைந்ததாகும். வளமான நாடு இன்று கட்டாக்காலி நாடாக உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள் பிச்சைக்காரர்களாக வாழ வேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். இந்த உடன்படிக்கை குறித்து அநுரா பண்டாரநாயக்க தெரிவிக்கையில்,

ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் குறித்து எனது கருத்தை நான் கடந்த பதினெட்டு மாதங்களாக கூறிவந்தேன். இந்தக் கருத்துக்கள் இன்று நடைமுறைப்படுத்தப்படுவதையிட்டு நான் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

பொதுத்தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில், சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் மற்றும் இதர கட்சிகளும் இணைந்து பாரிய வெற்றியைப் பெறத் தீர்மானித்துள்ளோம்.

இந்தக் கூட்டு முன்னணியைக் குழப்ப ஐக்கிய தேசியக் கட்சி பல்வேறு சதித்திட்டங்களில் ஈடுபடலாம் எனவும் தெரிவித்தார்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1583 திகதி: 20.01.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| E | 2 | 8 | 2 | 7 | 8 | 4 |

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரு.ச.) | விற்பனை விலை (ரு.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 97.48 | 98.61 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 174.11 | 176.36 |
| 1 யூரோ | 120.64 | 122.46 |
| 1 சுவிஸ் பிராங் | 76.58 | 78.22 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 73.51 | 75.09 |
| 1 ஜப்பானிய யென் | 00.90 | 00.92 |
| 1 சவூதி றியால் | 26.29 | 26.29 |




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.